GOKULAM

ஜூன் 2008 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



சிறுகதைப் போட்டி!

மாணவப் பத்திரிக்கையாளர்கள்

குதூகலமாய்த்

கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்


501


502


503


504


505


506


507


508


509


510


511


512


513


514


515


516


517


518


519


520


521


522


523


524


525

கோகுலம்

கல்கி

ஜூன் 2008 மலர் : 26 இதழ் : 5

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

உங்கள் கைகளில் உள்ள இந்த இதழ், மாணவர்களே தயாரித்த இதழ். நமது மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் வென்று, கோகுலம் அலுவலகத்துக்கு வந்து, அவர்கள் என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை விரிவாக 'குதூகலமாய்த் தயாரித்த கோகுலம்' கட்டுரையில் சொல்லியிருக்கேன். (பக்கம் 78). படிச்சுப் பாருங்க, மறக்காமல் உங்கள் கருத்தை அஞ்சலட்டையில் எழுதியனுப்புங்க!

புது வகுப்புக்கு (சிலர் புதுப் பள்ளிக்கு) ஜோரா கிளம்பிட்டு இருப்பீங்க. நல்லா படிங்க, ஆசிரியரிடம் நல்ல பெயர் எடுங்க. சக மாணவர்களோடு நட்பை ஏற்படுத்திக்கங்க. நாட்டுல சில பெரியவங்க போடற சண்டையே போதும். நீங்க சண்டை போட்டுக்காதீங்க. ஏதோ கோபத்துல சண்டை போட்டுட்டாலும் உடனடியா மறந்து, கை குலுக்கி நட்பாயிடுங்க. எதிரியை ஜெயிக்கறதுக்கு உலகிலேயே எளிமையான வழி, நண்பனாக்கி அன்பு காட்டறதுதான்! இதுக்கு பொருள் செலவில்லை, சேதாரமும் கிடையாது. மனசுக்கும் சந்தோஷம் கிடைக்கும்.

கடந்த மாதம் மியான்மரில் புயல், சீனாவில் பூகம்பம்... இப்படி இயற்கை சீற்றத்தால் நிறைய உயிர்ச்சேதம் ஏற்பட்டுடுச்சு. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்; இனி இப்படி நடக்காமல் இருக்க இறைவனை வேண்டுவோம்!

அன்புடன்
கோகு



செலவில்லை... சேதாரமில்லை!

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
உதவி ஆசிரியர் :
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!













ரசிகர்களின் அமோக வரவேற்புடன் நடந்து முடிந்துள்ளது ஐ.பி.எல். ட்வென்டி - ட்வென்டி போட்டிகள்! அவற்றிலிருந்து சில சாதனைத் துளிகள்...

● பெங்களூருக்கு எதிராக நடைபெற்ற முதல் போட்டியில் கொல்கத்தா அணியின் மெக்கல்லம் 158 ரன்களைக் குவித்து அனைவரையும் ஆச்சர்யத்தில் திளைக்க வைத்தார்.

● சென்னை அணி தொடர்ந்து நான்கு வெற்றிகளையும் ராஜஸ்தான் ஐந்து தொடர் வெற்றிகளையும் பெற்றன. இதேபோல் ஐந்து தொடர் வெற்றியை ருசித்த அணி பஞ்சாப்.

● ட்வென்டி -ட்வென்டி போட்டிகளென்றால் பேட்ஸ்மேன்களின் ஆதிக்கம்தான் என்பதை முறியடித்து சில பந்து வீச்சாளர்களும் ஜொலித்தனர். அவர்களில் ஒருவர் தன்வீர் (ராஜஸ்தான்), சென்னை அணிக்கு எதிராக ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தி, 'வாவ்' என வியக்க வைத்தார்.

● சென்னை அணிக்கு லேட்டாக வந்த பாலாஜி, ரசிகர்களிடம் 'பலே' வாங்கினார். பஞ்சாப் அணிக்கு எதிராக 'ஹாட்ரிக்' உட்பட ஐந்து விக்கெட்களை எடுத்



பலே பாலாஜி... அடடே அக்தர்... வாவ் தன்வீர்...!

தார். முதல் ஐ.பி.எல் ஹாட்ரிக் இதுதான்! ஹாட்ரிக் புரிந்த இன்னொரு வீரர் மிஸ்ரா (டெல்லி).

- சர்ச்சைகளின் மன்னன் அக்தர், ஒரு வழியாக கொல்கத்தா அணிக்காக விளையாட அனுமதிக்கப்பட்டார். களம் இறங்கிய முதல் போட்டியிலேயே டெல்லியின் நான்கு முக்கிய விக்கெட்களை அள்ளி, 'அடடே' சொல்ல வைத்தார்.

- காயத்தால் ஓய்வில் இருந்த டெண்டுல்கர் மும்பை அணிக்கு கேப்டனாக இறங்கிய முதல் போட்டியில், ஜெயசூர்யா வாணவேடிக்கை நிகழ்த்தினார். சென்னைக்கு எதிரான போட்டியில் 48 பந்துகளில் 115 ரன்களைக் குவித்து (ஆட்டம் இழக்காமல்) அணிக்கு வெற்றி மாலையை அணிவித்தார்.

- இப்படி பல சாதனைகள் நடந்த மைதானத்தில் சர்ச்சைகளும் நிகழ்ந்தன. மும்பை அணிக்கு தற்காலிக கேப்டனாக இருந்த ஹர்பஜன், பஞ்சாப் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த்தைக் கன்னத்தில் அறைந்தார். இதற்குத் தண்டனையாக மற்ற போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டார்.

- கொல்கத்தா கேப்டன் கங்குலி, ராஜஸ்தான் கேப்டன் வார்ன் இருவரும் வார்த்தை போர் புரிந்தனர். இதேபோல் பெங்களூரு அணியின் உரிமையாளர் விஜய் மல்லய்யா, ராகுல் டிராவிட்டை வார்த்தைகளால் வறுத்தெடுத்தார்.

விளையாட்டில் சாதனைகளைப் போலவே சர்ச்சைகளும் தவிர்க்க முடியாதவை. எனினும், சர்ச்சைகளை மறந்து, சாதனைகளை மட்டும் ஊக்கப்படுத்தினால், ரசிகர்களுக்கும் கொண்டாட்டமாக இருக்கும். வீரர்களுக்கும் தெம்பாக இருக்கும். சரிதானே?

- நா.வருண்

(மாணவப் பத்திரிகையாளர்)

தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையின் செயலாளராக இருப்பவர் வெ.இறையன்பு. இவரை அரசு அதிகாரியாக (மாவட்ட ஆட்சியர்) மட்டுமின்றி, சிறந்த எழுத்தாளராகவும் அனைவரும் அறிவர். இவரது கதை, கட்டுரைகள், மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தன்னம்பிக்கையூட்டும் டானிக்! இவரை நமது மாணவப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.



எங்கள்

யாழினி: உங்களுடைய குட்டிக் கதைகளெல்லாம் நிறைய படிச்சிருக்கோம். இப்படிக் கதை சொல்லும் ஆர்வம் வந்தது எப்படி?

வெ.இறையன்பு: எந்த ஒரு விஷயத்தையும் உதாரணம் காட்டி சொல்லும்போது, கேட்பவர்கள் மனத்தில் நன்றாகப் பதியும். கதை மூலம் சொல்லும்போது அது எத்தகைய கடினமான விஷயமாக இருந்தாலும் கேட்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படாது.

அனீஸ் ஃபாத்திமா: சிறு வயதில் நீங்கள் விரும்பிப் படித்த கதைகள் என்ன?

பஞ்ச தந்திரக் கதைகள், ஈசாப் கதைகள். இவையெல்லாம் எனக்குள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

நா.வருண்: நீங்க சின்ன வயசுல என்னவாகணும்னு ஆசைப்பட்டீங்க? யாரெல்லாம் ஊக்கப்படுத்தினாங்க?

கலெக்டராதான் ஆகணும்ன்னு எந்த லட்சியமுமில்லை. நல்லா படிக்கணும், நிறைய விஷயங்களைத் தெரிஞ்சுக்கணும். இதுதான் அடிப்படையா இருந்தது. அப்பா, அம்மா உட்பட நிறையப் பேர் ஊக்கப்படுத்தினாங்க.

கு. நித்யானந்தன்: நீங்கள் மிகவும் ரசித்தது குழந்தைப் பருவமா? மாணவப் பருவமா? தற்போதைய பருவமா?

ஒவ்வொரு பருவத்திலும் ஒரு அழகு இருக்கு. எல்லா பருவங்களிலும் நாம் புதிது புதிதாக எதையாவது கற்றுக் கொண்டே இருக்கிறோம். ஆனாலும் மாணவப் பருவம்தான் நமக்கு சிறகுகள் முளைக்கும் பருவம். பெற்றோர் துணையின்றி தனியாக வெளியே பறக்க முடிகிற பருவம். அப்போது நாம் எதையெல்லாம் கற்கிறோமோ அவையே நமது வாழ்க்கையை முடிவு செய்யும். சிறகுகள் சரியாக முளைத்து, நல்ல விஷயங்களைக் கற்றால் அந்தப் பருவம் சிறப்பாக அமையும்.

யாழினி: இப்போது சுற்றுலாத் துறை



வீட்டு அலாரம்!

வெ. இறையன்பு -மாணவர்கள் சந்திப்பு

செயலாளராக இருக்கிறீர்கள். உங்களுக்கு மிகவும் பிடித்த சுற்றுலா தலம்?

கொல்லிமலை! இயற்கையின் அழகை எவ்வளவு ரசிக்க முடியுமோ அவ்வளவையும் அங்கே பார்த்து ரசிக்கலாம்.

அனீஸ் ஃபாத்திமா: சுற்றுலாத் துறை வளர்ச்சியில் மாணவர்களாகிய எங்களுக்கு பங்குண்டா?

கண்டிப்பாக! தாய், தந்தை கொடுக்கும் பணத்தைச் சேமித்து வைத்து ஆண்டுக்கு ஒருமுறை நண்பர்களுடன் சுற்றுலா செல்லுங்கள். அப்படிச் செல்கையில் சொகுசாக பேருந்தில் மட்டுமே பயணித்து, ஹோட்டல் அறைக்குள் முடங்குவதால் பயனில்லை. இயற்கையை ரசிக்க வேண்டுமெனில் காலார நடக்க வேண்டும். நின்று, நிதானமாக ஒவ்வொரு காட்சியையும் கவனிக்க வேண்டும். அப்போதுதான் இயற்கையின் முக்கியத்துவம் நமக்குப் புரியும். அதை மற்றவர்களுக்குச் சொல்ல முடியும். இங்கே வெளியே பாருங்கள். நிறைய மரங்கள் உள்ளன. நிறைய பறவைகள் உள்ளன. விடியற்காலை நான்கு மணிக்கே அவை எழுந்துவிடும். அவற்றின் குரலே எங்களை எழுப்பும் அலாரம். சுற்றுச் சூழலை ரசிப்பதோடு நின்றுவிடாமல் பாதுகாப்பதும் நமது பொறுப்பு. கண்ட இடங்களில் குப்பைகளைப் போடக்கூடாது. வேறு யாராவது அப்படிச் செய்தாலும் நீங்கள் அவர்





* கு.நித்யானந்தன்

''இறையன்புன்னு பெயர் வெச்சுட்டு இருக்கீங்களே உங்களுக்கு இறைவன் மீது அன்பு இருக்கிறதா?''

களிடம் சென்று இங்கே போடாதீர்கள் என்று சொல்ல வேண்டும். அவற்றை அகற்ற வேண்டும். ஒருவர் செய்வதைப் பார்த்தால் அடுத்தவரும் அதனைப் பின்பற்றுவர்.

நா.வருண்: சுற்றுலாத்துறை மூலமாக கிராம வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும்?

கிராம சுற்றுலா என்றே ஒரு பிரிவு இருக்கிறது. கிராமியக் கலைகளை வளர்ப்பது, அங்குள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, அதன் மூலம் கிராமத்து கலைஞர்கள், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது ஆகியவை முக்கியமானது. நகரத்திலிருக்கும் பலருக்கு எந்த காய்கனி எப்படி விளைகிறது என்பதே தெரியவில்லை. சுற்றுலா செல்கையில் அவற்றைக் காணலாம். அதனால் விவசாயிகளின் உழைப்பை அறியலாம். மாட்டு வண்டி, குதிரை வண்டிகளில் பயணிப்பதே இனிமையான அனுபவமாக இருக்கும்.

கு.நித்யானந்தன்: வெளி மாநிலம், வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத்துறை எவ்வித பாதுகாப்பினைத் தருகிறது?

சுற்றுலாத் துறை அதிகாரிகள், பயண நாளில் தொடங்கி எல்லாவிதத்திலும் உதவுகிறார்கள். செல்லும் இடங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பயணிகளுக்குத் தேவையான அனைத்தையும் செய்கிறார்கள்.

யாழினி: தனியார் தீம் பார்க்குகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதில் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. கொண்டாட்டத்துடன் இருக்கும் அதே சமயத்தில், எப்படி நடந்துகொண்டால் பாதுகாப்பு என்பதையும் உணர வேண்டும். நமது உயிரை அடுத்தவர் பாதுகாக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல.

நா.வருண்: உங்கள் பெயர் இறையன்பு, உங்கள் சகோதரி பெயர் இன்சுவை...இப்படி வித்தியாசமா பெயர்களை வைக்கக் காரணம் என்ன?

எங்கப்பா சுத்தமான தமிழ் பெயர் வைக்கணும்னு ஆசைபட்டு இப்படி வைத்தார். அதோடு அவர் சொன்னது, இந்த மாதிரி பெயர் வேற யாருக்குமே

* யாழினி



''தனியார் தீம் பார்க்குகளில் ஏற்படும் விபத்துகளை தடுக்க எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?''

"உங்கள் பெயர் இறையன்பு. உங்கள் சகோதரி பெயர் இன்சுவை... இப்படி வித்தியாசமான பெயர்களை வைக்கக் காரணம்...?"



* நா.வருண்

இருக்காது. ஒரே பெயர்ல நிறைய பேர் இருப்பாங்க. ஏதாவது தப்பு பண்ணிட்டு அதே பெயர்ல இருக்கிற மத்தவங்க மேல பழி சுமத்திடுவாங்க. ஆனா, உங்களால் அப்படிச் செய்ய முடியாது. அதனால தப்பும் செய்யக் கூடாதுன்னு சொன்னார்.

கு. நித்யானந்தன்: இறையன்புன்னு பெயர் வெச்சுட்டு இருக்கீங்களே... உங்களுக்கு இறை நம்பிக்கை, இறைவன் மீது அன்பு இருக்கிறதா?

இறைவன் படைத்த உயிர்கள் மீது அன்பு செலுத்துவதே இறைவனிடம் செலுத்தும் அன்பாகும். எந்த உயிரையும் துன்புறுத்தாமல், மரம், செடி, புற்களை யும் காயப்படுத்தாமல் இருப்பது இறைவன் மீது அன்பு செலுத்துவதற்குச் சம மாகும். ஆகவே எல்லா உயிரினங்களையும் அன்புடன் நடத்த வேண்டும்.

அனீஸ் ஃபாத்திமா: நீங்கள் சின்ன வயதில் எந்த மாதிரியான விளையாட்டு களை விளையாடுவீர்கள்?

கால்பந்தாட்டம், கபடி, வாலிபால்.

நா.வருண்: எங்களுக்காக ஒரு குட்டிக்கதை சொல்லுங்களேன்...

ஒரு மாணவன் இருந்தான். அவன் அசைவம் சாப்பிடவே மாட்டான். ஒருநாள் நண்பனுடன் பள்ளியில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அன்றைக்கு அவன் கத்தரிக்காய் கொண்டு வந்திருந்தான். அதைப் பார்த்த நண்பன், "இந்த கத்தரிக்காய் மீன் மாதிரி இருக்கிறது. நீ மீனைத்தான் சாப்பிடுகிறாய்" என்று கிண்டலடித்தான். அன்று முதல் அந்த மாணவனுக்குக் கத்தரிக்காயைப் பார்க்கையில் மீன் ஞாபகமே வந்தது. ஆகவே, கத்தரிக்காயைச் சாப்பிடுவதை நிறுத்திவிட்டான். மாணவன் வளர்ந்து பெரியவனாகி வெவ்வேறு ஆட்களின் நட்பு கிடைத்தது. அதன்மூலம் அசைவம் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால், இப்போதும் கத்தரிக்காய் சாப்பிட மாட்டான். ஆகவே, சின்ன வயதில் நமது மனத்தில் பதிவதே கடைசி வரைக்கும் நிலைக்கும். நல்ல எண்ணங்களை இந்த வயதில் மனத்தில் பதியவைப்பது முக்கியம்.

(நான்கு பேரும் அவருக்கு நன்றி சொல்லி விடை பெற்றனர்.)

தொகுப்பு: **யுவா**
படங்கள்: **ஸ்ரீஹரி**

* அனீஸ் ஃபாத்திமா



"சுற்றுலாத் துறை வளர்ச்சியில் மாணவர்களாகிய எங்களுக்குப் பங்குண்டா?"

தும்பிக்கையும் நம்பிக்கையும்!

கதை: திரேசியா பவுலோஸ் படம்: பிள்ளை




யானை மாமா! யானை மாமா!
ஏன் இப்படிப் பதற்றத்துடன் ஓடி வருகிறீர்கள்?
இவ்வளவு நாளாக ஏரிக்குத் தண்ணீர் குடிக்கச் செல்லும் விலங்குகள் காணாமல் போனதற்கான காரணம் தெரிந்துவிட்டது.
அப்படியா? என்ன காரணம்?
அந்த ஏரியில் இருக்கும் முதலைதான் அவைகளைப் பிடித்துத் தின்றுவிடுகிறது, மாமா.
இனி நாம் எவ்வாறு தண்ணீர் குடிப்பது?
யானை சற்று நேரம் யோசித்தது.
என் பின்னாலேயே வாருங்கள், வழி கிடைத்துவிட்டது.
யானை ஒரு மேடான பகுதியில் ஏறிக்கொண்டது.
இதோ; இப்படித்தான் நீங்களும் ஏரிக்கு அருகில் செல்லாமலே தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க வேண்டும்.


ஆனால், எங்களுக்குத்தான் உங்களைப் போல தும்பிக்கைஇல்லையே மாமா?
தும்பிக்கை இல்லாவிட்டால் என்ன, நம்பிக்கை இருந்தால் எதையும் சாதிக்கலாம்.
இதோ அங்கே வளர்ந்துள்ள நாணற் தண்டுகளைப் பார்த்தீர்களா?
புரிய வில்லையே மாமா!
யானை, நீளமாக இருந்த நாணற் தண்டுகளை ஒடித்துத் தந்தது.
இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். இவைக் குழாய் வடிவில் இருப்பதால் உங்களுக்கு தும்பிக்கையாகப் பயன்படும்.
மிகவும் நன்றி, யானை மாமா, எங்களுக்கு நல்லதொரு வழி ஏற்படுத்தித் தந்தீர்கள்.
இப்போது தெரிந்ததா. தும்பிக்கையை விட நம்பிக்கை வலிமையானது.

கடித மாலை

ஆணவம் கண்களை மட்டுமல்ல, கருத்தையும் மறைக்கும் என்பதை உணர வைத்த சிறுகதை, 'மயில் போட்ட சவால்!'

- த. ரா. சுந்தரராஜ், ஏழாம் வகுப்பு, தூய சவேரியன் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை

எமக்கு வாசிக்கத் தெரிந்த நாளில் இருந்து 'கோகுலம்' வாங்கி வருகின்றோம். மாணவர்களுக்கு ஓர் அறிவுக் களஞ்சியமாக கோகுலம் திகழ்கிறது. பல சிறுவர்களின் திறமையை வளர்க்கும் கோகுலத்தில் இது வரை நாம் அனுப்பிய ஆக்கங்கள், படைப்புகள் எதுவுமே பிரசுரிக்கப் படவில்லை. இதனால் நாம் பெரும் கவலையடைகிறோம்!

- ச.சாம்பவி, ச.யாதவ ராம் பதுளை,இலங்கை

(கவலை வேண்டாம்! எழுத எழுதத்தான் படைப்பு பொலிவாகும். தொடர்ந்து அனுப்புங்கள். தகுதியானவை பிரசுரமாகும்!)

அபிமானக் கிரிக்கெட் நட்சத்திரங்களைப் படங்களுடன் வெளியிட்ட 'கோடையிலே ரன் மழை' என்ற கவர் ஸ்டோரி பவர் ஸ்டோரியாக இருந்தது.

- ஆர்.ஜி.ஏ. சாயிபிரேமபாலா, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ணா பள்ளி, திசையன்விளை

கவிதை பூங்கா பகுதியில் கு.ஷ்யாம் எழுதிய 'அகிலம் செழிக்க' கவிதையின் ஒவ்வொரு வரியும் நயம் பட இருந்தது!

- எம்.சிவரஞ்சனி, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வலங்கைமான்



கவர் ஸ்டோரி பவர் ஸ்டோரி!

எங்கள் அன்பு கோகுலத்தில் சிறுவர்களுக்காக சில 'மேஜிக்' முறைகளை எழுதி அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

- சு.துர்கா தேவி, ஒன்பதாம் வகுப்பு, வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப் பள்ளி, சிவகாசி

(தாராளமாக அனுப்பலாம். சரியானவை பிரசுரிக்கப்படும்!)

பள்ளிகள்

- முனைவர் ஆசுரா



ஹாய் குட்டீஸ்! பள்ளிக்கூடம் ஆரம்பிச்சாச்சா? பள்ளிக்கூடம் செல்வது என்பது இன்று நேற்றல்ல, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உலகில் நிலவி வரும் நடைமுறைதான். பழங்காலம் முதல் பல்வேறு நாடுகளிலும் பள்ளிக்கூடங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்று தெரிந்து கொள்வோம்.


பழங்கால ரோமர்களின் கல்விமுறை!

பழங்கால ரோமர்களின் கல்வி முறை வித்தியாசமானதாக இருந்தது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டுகளில் ஒவ்வொரு குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றோர்தான்.

தாய்மார்கள் குறிப்பாகப் பெண் பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகளையும், பிற குடும்ப நிர்வாக முறைகளையும் கற்றுக்கொடுத்தனர். வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவையான வழிமுறைகளை ஆண் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதில் தந்தையர்கள் ஆர்வம் காட்டினர். ரோமன் சட்டங்கள், வரலாறு, உடற்பயிற்சி முறைகள், போர் முறைகள் ஆகியவற்றையும் கற்றுக்கொடுத்தனர்.

பணக்கார வீட்டுக் குழந்தைகள் கிரேக்கம், இலத்தீன் என இரண்டு மொழிகளையும் கற்றனர். காலை சூரிய உதயத்துக்கு முன்பாகப் பள்ளிக்கூடம் திறந்துவிடும். ஆனால் மாலையில் எப்பொழுது முடியும் என யாருக்கும் தெரியாது. எல்லா பள்ளிகளும் மார்ச் 24 ஆம் தேதிதான் தொடங்கும்.

12 அல்லது 13 ஆம் வயதில் ஆண் பிள்ளைகள் உயர் கல்வி கற்பதற்காக



இலக்கணப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 16ஆம் வயதில் மேடைப் பேச்சு, சொற்பொழிவு போன்ற கலைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன. பழங்கால ரோமர்களின் ஆட்சியில் கல்வி என்பது ஏழைகளுக்கு எட்டாக் கனியாகவே இருந்தது.





* கிரேக்கப் பள்ளியில்...

பலவிதம்!

கிரேக்கப் பள்ளிகள்!

கிரேக்க மொழியில் உள்ள 'ஸ்கோலியன்' (Scholeion) என்னும் சொல்லில் இருந்து 'ஸ்கூல்' (School) என்னும் சொல் உருவானது.

பழங்கால கிரேக்கத்தில் இருந்த 'ஸ்பார்ட்டா' என்னும் பகுதியில் பல பள்ளிக்கூடங்கள் இருந்தன. அனைத்துப் பள்ளிகளையும் அரசாங்கமே கவனித்து வந்தது. தொடக்கப் பள்ளிப் பாடங்கள் கடுமையாக இருந்தன. ஆண் பிள்ளைகள் ஆறாம் வயதில் உறைவிடப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டனர். முக்கியமான பயிற்சி 'போர்ப் பயிற்சி'தான்!

மாணவர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு ஒரு தலைவன் நியமிக்கப்பட்டான். மல்யுத்தப் போட்டிகள் நடத்தி திறமையான மாணவர்களைத் தேர்வு செய்தனர். ஸ்பார்ட்டாவில் வாழ்ந்த சிறுமிகள் மல்யுத்தம், உடற்பயிற்சிக் கலைகளில் மட்டுமே ஈடுபட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

'ஏதென்ஸ்'ஸில் கி.மு.5 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே நிறைய தனியார் பள்ளிக்கூடங்கள் இருந்தன. ஒரு பள்ளியில் பத்து அல்லது பதினைந்து மாணவர்கள் மட்டுமே படித்தனர். மாணவர்கள் தங்களின் ஏழாம் வயதில் பள்ளிக்குச் சென்றனர். அங்கே படிக்க, எழுத, உடற்பயிற்சி, இசைக் கருவிகள் மீட்கப் பயிற்சியளித்தனர். ஸ்பார்ட்டா மாணவர்கள் போர் வீரர்களாக உருவாகினர்.

முதல் மழலையர் பள்ளி!

ஜெர்மன் மொழியில் 'கிண்டர் கார்



டன்' என்பதற்கு, 'குழந்தைகள் பூங்கா' என்று பொருள். முதல் கிண்டர் கார்டன் பள்ளி ஜூன் 28, 1840இல்



ஆப்பிரிக்கப் பள்ளியில்...

ஜெர்மனியில் 'பிரடெரிக் வில்ஹம் அகஸ்ட் போர்பெல்' என்பவரால் தொடங்கப்பட்டது.

மரத்தடி மழலையர் பள்ளி என்பது அழகான இயற்கைச் சூழலில் இயங்கும் பள்ளிக்கூடம். மூன்று வயது முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகள் இங்கே படிப்பர். ஆங்கிலத்தில் இப்பள்ளிகள் 'வுட் கிண்டர் கார்டன்' என அழைக்கப்படுகிறது. குழந்தைகளை அடைத்து வைக்காமல் இயற்கைச் சூழலில் வைத்து மகிழ்ச்சியாகக் கற்றுக் கொடுப்பதுதான் இப்பள்ளியின் நோக்கம்.

உலகிலேயே ஒழுக்கமான பள்ளி!

பள்ளிக்கூடங்களில் 'ஒழுக்கம்' என்பது இன்றியமையாதது. கொல்கத்தாவில் இயங்கி வரும் தென்முனை உயர்நிலைப் பள்ளி (South point High School) தொடர்ந்து ஏழு ஆண்டுகள் 'உலகிலேயே ஒழுக்கமான பள்ளி' என்னும் சிறப்பைப் பெற்றுள்ளது. 'உலகிலேயே மிகப் பெரிய பள்ளி' என்னும் கின்னஸ் சாதனையையும் 1984 ஆம் ஆண்டு முதல் 1992 வரை தக்க வைத்தது.

உலகிலேயே அதிகமான மாணவர்கள் படிக்கும் பள்ளி!

லக்னோவில் உள்ள 'சிட்டி மான்டசரி' பள்ளியை (City Montessori School) 1959 ஆம் ஆண்டு பாரதி காந்தி, ஜெகதீஷ் காந்தி என்பவர்கள் தொடங்கினர். இப் பள்ளி அதிகமான மாணவர்கள் படிக்கின்ற பள்ளி என்ற உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது. 2008 கணக்கெடுப்பின்படி 32,114 படிக்கின்றனர்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய சமூகப் பள்ளி!

ஆசியாவிலேயே மிகப் பெரிய, பழங்குடியின மாணவர்கள் தங்கிப் படிக்கும் உறைவிடப் பள்ளி ஒரிஸ்ஸாவில் உள்ள 'கலிங்கா சமூக அறிவியல் பயிற்சி நிலையம்'. 5000க்கும் மேற்பட்ட பழங்குடியின மாணவர்கள் இங்கு படிக்கின்றனர். இப் பள்ளியில் மழலையர்க் கல்வி முதல் முதுகலைக் கல்வி வரை அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது. ஒரிஸ்ஸா மாநிலத்தில் 52 வகையான பழங்குடியின மாணவர்கள் இங்கு பயில்கின்றனர். உயர்நிலைத் தேர்வுகளில் கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பள்ளி மாணவர்கள் 100% தேர்ச்சி அடைந்துள்ளனர். இப் பள்ளியை நடத்தி வருபவர் டாக்டர் அச்சுதானந்தா சமந்தா என்பவர்.

ஆப்பிரிக்க மாணவர்களின் கல்விக் கனவு!

ஆப்பிரிக்க நாடுகளில் இன்றும் வசதி படைத்தவர்கள் மட்டுமே கல்வி கற்கும் அவல நிலை தொடர்கிறது. தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சமுதாயப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு சீருடைகள் கிடையாது. கல்விக் கட்டணமும் இல்லை. நான்காம் வயதில் தொடக்கக் கல்வி அளிக்கின்றன. கணிதம், ஆங்கிலம், தாய்மொழி, அறிவியல், சமூக அறிவியல், உடல்நலம் பேணுதல், வாழ்வியற் கலைகள், உடற்பயிற்சி போன்றவற்றைக் கற்பிக்கின்றனர்.



* கலிங்கா பள்ளியில்...

மழலையர்க் கல்வியில் தொடங்கி, அணுவைப் பிளந்து படிக்கும் அதீத விஞ்ஞானக் கல்வி என கல்வித் துறை நாளும் வளர்ந்துகொண்டே வருகின்றது. மாறிவரும் கல்விச் சூழலில் 'அனைவருக்கும் கல்வி' என்பது உறுதி செய்யப்பட்டால் உலகில் பல மாற்றங்கள் வரும் என்பதை யாரும் மறுக்க முடியாது!

போட்டி



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி: 16.6.2008

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 12

1. இறையன்பு அவர்களுக்குப் பிடித்த சுற்றுலா தலம் ....
2. ஆசியாவிலேயே மிகப் பெரிய சமூகப் பள்ளி ....
3. பூச்சிகளில் அதிக ஆண்டுகள் வாழ்வது ....
4. அலங்கரிக்கப்பட்ட ஆழித் தேரின் மொத்த எடை ....
5. ராஜஸ்தானிலுள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....



தேடி வரும் கோகுலம் படிக்க படிக்க குதூகலம்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-N.P, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 032

ஆயுள்

ஆழி

பொதுவாக உயிரினங்கள், மூளை அளவு அதிகமாக இருந்தால், அதிக ஆண்டுகளும், மூளை அளவு குறைவாக இருந்தால் குறைந்த ஆண்டுகளும் வாழ்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். தவிர, பாலூட்டிகளில் பெரிய உயிரினங்கள் அதிக ஆண்டுகளும், சிறிய உயிரினங்கள் குறைந்த ஆண்டுகளும் வாழ்கின்றனவாம்.




நீரில் வாழும் பாலூட்டிகளில் மிகப் பெரியது 'நீலத் திமிங்கிலம்.' அது சுமார் 37 மீட்டர் நீளமும், 160 டன் எடையும் இருக்கும். 50 ஆண்டுகள் உயிர் வாழும்! அதன் சிறு துளை போன்ற காதுகளில் படியும் மெழுகு அடுக்குகளைக் கொண்டு அதன் வயதைக் கணக்கிடுகிறார்கள்!



நிலத்தில் வாழும் பாலூட்டிகளில் மிகப் பெரியது யானை. அது 4 மீட்டர் உயரமும், 4 டன் எடையும் இருக்கும். சுமார் 80 ஆண்டுகள் வாழும். ஆனால் வளர்க்கப்பட்ட யானைகளில் 'இளவரசி அலைஸ்' என்ற பெண் யானை, லண்டன் மிருகக் காட்சிசாலையில் 152 வயது வரை வாழ்ந்தது. யானையின் வயதை அதன் காதுகளில் காணப்படும் சுருக்கங்களின் எண்ணிக்கையைக் கொண்டும், நகங்களின் முதிர்ச்சியைக் கொண்டும் கணிக்கிறார்கள்.

நிலத்தில் வாழும் பாலூட்டிகளில் மிகவும் சிறியது சுண்டெலி. அது சுமார் 4 ஆண்டுகள் உயிர் வாழும்.






அனைத்து உயிரினங்களிலும் ஊர்வன வகுப்பைச் சேர்ந்த கடல் ஆமைகள் அதிக ஆண்டுகள் வாழ்கின்றன. பசிபிக் சமுத்திரத்தில் உள்ள 'டொங்கா' தீவுகளில், 1777-இல் அங்கே சென்ற 'கேப்டன் குக்' என்ற மாலுமியால் அந்த நாட்டு மன்னருக்குப் பரிசாக அளிக்கப்பட்ட கடல் ஆமை ஒன்று 1977-இல், தன் 200 வது வயதில் இறந்தது.

மீன் இனங்களில், அதிக ஆண்டுகள் வாழ்வது 'ஸ்டார்ஜியன்' என்னும் மீன். அது 100 ஆண்டுகள் வாழும்!





கெண்டை மீனின் ஆயுள் 50 ஆண்டுகள். ஒரு மீனின் வயதை அதன் கண்ணில் காணப் படும் வட்டங்களின் எண்ணிக்கையை வைத்துக் கண்டுபிடிக்கிறார்கள்.

மான்கள் 30 ஆண்டுகள் வாழ்கின்றன. கலைமானின் வயதை அதன் கொம்புகளில் உள்ள கிளைகளை எண்ணி, அத்துடன் ஒன்றைக் கூட்டிக் கொண்டால் சொல்லி விடலாம். 6 கிளைகள் இருந்தால், அதன் வயது 7.






ஆடுகளின் வயது, அவற்றின் கொம்பு களில் ஆண்டு தோறும் பதியும் வரிகளை வைத்துத் தீர்மானிக்கப் படுகிறது.



முதலையின் ஆயுள் 60 ஆண்டுகள். முதலை யின் வயதை அதன் முதுகில் இருக்கும் பெரிய புடைப்புக்களைக் கொண்டு கண்டுபிடிக்கிறார்கள்.



பூச்சிகளில் அதிக ஆண்டுகள் வாழ்வது 'டராண்டுலா' என்னும் சிலந்தி. இதன் ஆயுள் 25 ஆண்டுகள். இது 8 செ.மீ. வரை வளரும். எந்த இரையும் இல்லாமல் இரண்டரை ஆண்டுகள் உயிரோடு இருக்கும்!




'சிக்காடா' என்னும் சில்வண்டு சுமார் 4 செ.மீ. நீளம் இருக்கும். சிறகு 7 செ.மீ. இருக்கும். இது பூமிக்குள் 17 ஆண்டுகள் கூட்டுப்புழுவாகத் தங்கி வளரும். அத்தனை ஆண்டுகளும் மரத்தின் வேரில் உள்ள சத்துப் பொருள்களை உறிஞ்சிக் கொண்டு இருக்கும். 17 ஆண்டுகளுக்குப் பின் சிறகு முளைத்து பூமியை விட்டு வெளியே வரும். அதற்குப்பின் அதன் ஆயுள் 7 நாட்கள் மட்டுமே!

உலகில் உள்ள உயிரினங்களில் மிகவும் குறைந்த காலம் வாழ்வது 'மே-ஈ'. இது கூட்டுப் புழுவிலிருந்து ஈயாக வெளி வந்து ஒரே ஒரு நாள்தான் உயிரோடு இருக்கும்! ஏனென்றால், அதற்கு உடல்தான் உண்டே தவிர வாயும் இல்லை, வயிறும் இல்லை.



எகிப்தில் உள்ள 'கெய்ரோ' மிருகக்காட்சி சாலையில் பாதுகாப்பாளராகப் பணியாற்றிய 'மேஜர் ஸ்டான்லி ஃப்ளவர்' என்பவர் 1925-ஆம் ஆண்டு, முதன் முதலாக ஒவ்வொரு பிராணியும் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறது என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்து, அந்தத் தகவலை அச்சிட்டு உலகமெங்கும் அனுப்பிப் பதிவு செய்தார்.

இவற்றின் ஆயுள்:



கொரில்லா - 40 ஆண்டுகள்



குதிரை - 40 ஆண்டுகள்



நாய் - 20 ஆண்டுகள்



ராஜநாகம் - 35 ஆண்டுகள்



பறவைகளில் அதிக ஆண்டுகள் வாழ்வது கழுகு. 100 ஆண்டுகள்!



மனிதனின் ஆயுள் 70 ஆண்டுகள் என்பது ஒரு முடிவு. பிரிட்டனில், மனிதனின் அதிகபட்ச வயது 115 என்று பிறப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் ரஷ்யாவில் உள்ள ஜார்ஜியாவில்தான் 100 வயதைத் தாண்டியவர்கள் 2000 பேர்களுக்குமேல் வாழ்கிறார்கள்!

குழந்தைக் கவிஞர்

அழ.வள்ளியப்பா

நினைவுச் சிறுகதைப் போட்டி 2008



மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-
முதல் பரிசு ரூ.1000/-
இரண்டாம் பரிசு ரூ.500/-
மூன்றாம் பரிசு ரூ.500
(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள்:

- இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+ 2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
- கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழி கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.
- பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!
- போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.
- முடிவுத் தேதி: **31.7.2008**

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்
அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2008
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032

சின்னக் குன்றின் மீது இருந்தது அந்த முருகன் கோயில்.

''முருகப் பெருமான் பெயருக்கேற்ற மாதிரி அழகாகக் காட்சியளிக்கிறார்'' என்றார் சித்தப்பா.

ரஞ்சன் முழிப்பதைப் பார்த்து தமிழ்ச்செல்வி, ''புரியலையா? முருகுன்னா அழகுன்னு அர்த்தம். அழகாக இருப்பதால் முருகர்னு பெயர்'' என்றாள்.

முருகரைத் தரிசித்த பிறகு, ரஞ்சன், சித்தப்பா, தமிழ்ச்செல்வி, அவளது அம்மா ஆகிய நான்கு பேரும் குன்றிலிருந்து இறங்கத் தொடங்கினார்கள்.

கோயிலில் அன்று சுவையான பஞ்சாமிர்தத்தைப் பிரசாதமாகக் கொடுத்திருந்தார்கள். அதன் ருசி அவர்களின் வாயில் ஆனந்தத்தை அளித்தது.

அப்போது ரஞ்சனின் காதுகளில் பம்பை ஒலி கேட்டது. வரிசையாகக் காவடிகளை ஏந்தியபடி பலர் கோயிலை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

தோளில் உள்ள கழியை அவர்கள் விதவிதமாக சுழற்ற, காவடி ஆட்டம்

காவடி



ஆட்டம்!

பார்ப்பதற்கு மிக ரம்மியமாக இருந்தது.

காவடியைச் சுமந்து வந்த பக்தர்களின் நெற்றியில் பளிச்சென்று திருநீறு. அவர்களில் பலர் மஞ்சள் வண்ண உடையை அணிந்திருக்க, சிலர் காவி உடையில் இருந்தனர்.

''காவடி ஆட்டம் எப்படித் தொடங்கியது?'' என்று ரஞ்சன் கேட்டான். அவன் கண்கள் காவடிகளையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன. மேல்பகுதியில் அரை வட்டமாக மூங்கில் வளைக்கப்பட்டு,



அதற்கு மேலே காவி வண்ண ஆடையைச் சுற்றியிருந்தார்கள். தவிர, மயில் தோகைகளைச் செருகி வைத்திருந்தனர்.

''சபரி மலைக்குப் போகும் பக்தர்கள் இருமுடியைத் தலையில் சுமந்துக்கிட்டுப் போவதைப் பார்த்திருக்கியா?'' என்று கேட்டார் சித்தப்பா.

ரஞ்சன் பார்த்திருக்கிறான். அந்த இருமுடிகளில் ஒன்றில் நெய், தேங்காய் உட்பட ஐயப்பனுக்கு அளிக்க வேண்டிய நைவேத்தியங்களை வைத்திருப்பார்கள். இன்னொன்றில் பயணத்தின் போது சாப்பிடுவதற்கான தின்பண்டங்கள் இருக்கும்.

''அப்படித்தான் காவடி ஆட்டமும் தொடங்கிச்சுன்னு சொல்வாங்க'' என்றார்.

தமிழ்ச்செல்வியின் அம்மா தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள். ''அந்தக் காலத்திலே இடும்பன் என்கிற அரக்கன் ஒருத்தன் தன் தோளில் ஒரு கழியையும் அதன் இரண்டு முனைகளிலும் இரண்டு சின்ன மலைகளைச் சுமந்துக்கிட்டு முருகனை நோக்கிப் போனானாம். அந்தப் பழக்கம்தான் காவடியாட்டமாக மாறியதுன்னு எங்க பாட்டி சொல்வாங்க'' என்றாள்.

''இன்னொரு காரணமும் உண்டு. இப்போது பஸ், ரயில், கார்னு நிறைய வாகனங்கள் இருக்கு. ஆனால் அந்தக் காலத்தில் போக்குவரத்து வாகனங்கள் ஏது? 'நட'ராஜா சர்வீஸ்தான்! தொலை தூரத்திலே இருக்கும் கோயிலுக்குக் கிளம்பும்போது பக்தர்கள் தோளில் ஒரு நீண்ட கழியை வைத்துக்கொண்டு அதன் இருமுனைகளிலும் கடவுளுக்கான காணிக்கைகளைத் தொங்கவிட்டபடி கிளம்புவாங்க. மலையில் ஏறும் போது இப்படிச் சுமந்து செல்வது கொஞ்சம் எளிதாக இருக்கும்.''

அருண் சரண்யா

துளிகள்...

- காவடியாட்டம் ஆடும்போது கைகளால் காவடியைத் தொடமாட்டார்கள்.
- பழனி, திருத்தணி போன்ற முருகர் கோயில்களில் விசேஷ நாட்களன்று சென்றால் நிச்சயம் காவடியாட்டத்தைப் பார்க்கலாம்.
- காவடியாட்டத்துக்காக இட்டுக் கட்டப்பட்ட பாட்டுகளை 'காவடிச் சிந்து' என்று குறிப்பிடுவார்கள். காவடிக்கான கழி, புரசை, மரம் அல்லது தேக்கு மரத்தில் செய்யப்பட்டிருக்கும்.
- பொதுவாக ஆண்கள் மட்டுமே காவடியாட்டத்தை ஆடுவது வழக்கம்!

''ஆனா இவங்க ஆடிக்கிட்டே வர்றாங்களே? அது சமீபகாலமாகத்தானா?'' என்று கேட்டான் ரஞ்சன்.

''இல்லே. காவடி ஆட்டம் பல காலமாக இருந்துவருவதுதான். ஊர்விட்டு ஊர் காவடியைத் தூக்கி நடக்கும்போது அலுப்பு, பயணக் களைப்பு தெரியாமல் இருக்க பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் செல்வது வழக்கம்'' என்றார் சித்தப்பா.

"காவடிகளிலே பால்காவடி, பன்னீர்காவடி, புஷ்பகாவடி, சந்தனக்காவடி, சேவல்காவடி இப்படி பல வகைகள் இருக்கு!"



''ரஞ்சன், காவடிகளிலே பால்காவடி, பன்னீர்காவடி, புஷ்பகாவடி, சந்தனக் காவடி, சேவல்காவடி இப்படி பல வகைகள் இருக்கு'' என்று அடுக்கினார் சித்தப்பா.

அப்போது அவர்களைத் தாண்டி சில காவடிகள் சென்றன.

சித்தப்பா விளக்கினார். ''காவடியின் இரண்டு பக்கமும் பால் நிரம்பிய குவளைகளை எடுத்து வருவாங்க. இந்தப் பால் முருகனுக்கு அபிஷேகம் செய்வதற்கு. இதை பால்காவடி என்பார்கள். இப்படி காவடியை சுமந்து செல்லும் பொருளுக்குத் தகுந்தபடி விதவிதமாக அழைப்பாங்க'' என்றார்.

இப்போது காவடி கலைஞர்கள் கோபுரத்துக்கு முன்னால் இருக்கும் சமதளத்துக்கு வந்துவிட்டார்கள். பம்பை, நையாண்டி மேளம் என ஆங்காங்கே இசைக் கருவிகள் இனிமையாக ஒலித்தன. காவடியாட்டக்காரர்கள் வரிசையாக நின்று, இந்த இசைக்கேற்ப ஆடியது பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது.

''நம்ம கிராமங்களிலே எவ்வளவு அழகான கலைகளெல்லாம் இருக்கு'' என்று ஆச்சரியப்பட்டான் ரஞ்சன்.

''இன்னும்கூட சில கிராமத்து கலைகள் இருக்கு. அவற்றையும் நாளைக்குக் காட்டுகிறேன்'' என்றார் சித்தப்பா. ○


கோகுலம்
எக்ஸ்பிரஸ்
வாசகர் பூங்கா!
உங்களின்
பல்சுவை படைப்புகள்
18



நான்தான்

அதிகாலை நேரம்! மார்க்கெட்டில் உள்ள அந்தக் காய்கறிக் கடையில் விதவிதமான காய்கறிகள் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தன. அத்தனை காய்கறிகள் முகத்திலும் பரவசம்! குண்டுக் கத்திரிக்காய் தன் நிறத்தையும் உருவத்தையும் பெருமையாகப் பார்த்தபடி பேசியது. ''காய்கறிகளின் ராஜாவே நான்தான்... என் நிறமென்ன... என் அழகு என்ன...! என் உச்சந்தலையின் கிரீட மென்ன!'' என தன் பெருமையைப் பறைசாற்றவும், கவனித்துக் கொண்டிருந்த தக்காளிப் பழம்....''செக்கச் செவேல்ன்னு அழகான மேனியோடு இருக்கேன் நான்... அழகு ராணிகளின் தலையில் இருக்கிற மாதிரி என் தலையிலும் கிரீடம் இருந்து என் அழகைக் கூட்டுது. நான்தான் காய்கறிகளின் அரசன்ங்கிறதுல என்ன சந் தேகம்?'' என்று கூறியது.

வெண்டைக்காயும் தன் அழகைச் சிலாகித்து, 'தான்தான் ராஜா' என்று கூற, பூசணிக்காய் தன் பிரம்மாண்ட உருவத்தைப் பற்றிப் பெருமையாகச் சொல்லி... 'நானே ராஜா' என்றது. இப்படியாக எல்லா காய்கறிகளுமே போட்டி போட்டுக்கொண்டு 'நான்தான் ராஜா' எனக் கூச்சல் போட ஆரம்பித்தன. அனைத்தையும் கேட்டபடி எதுவும் பேசாமல் அமைதியாக கவனித்துக்கொண்டிருந்தது பாகற் காய்.

உருளைக் கிழங்கு கிண்டலாய்... பாகற்காயைப் பார்த்து, ''என்ன ஒரு கோரமான உருவம் உனக்கு. செதில் செதிலாய் உடல்... எங்களைப் போன்ற வனப்புமில்லை, பளபளப்புமில்லை. போதாக்குறைக்கு உன் சுவையோ வெறும் கசப்பு'' எனச் சொல்ல, பாகற்காய் சோகமாய் தலை குனிந்து கண்ணீர் சிந்தியபடி நின்றது.

அப்போது அந்தக் கடைக்கு காய்கறி வாங்க வந்தவர், ''கத்திரிக் காய் பத்தியத்துக்கு ஆகாது.... உருளைக்கிழங்கு வாயுத் தொல்லை...'' என ஒவ்வொரு காய்கறிக்கும் ஒரு குறையைச் சொல்லி

வேண்டாம் என ஒதுக்கியவர், ''பாகற்காய் குடல் புழுக்களை அழித்திடும். அதையே ஒரு கிலோ கொடுப்பா'' எனக் கேட்டு வாங்கிக் கொண்டார். மற்ற காய்கறிகள் எல்லாம் புற அழகு பெருமைகளைப் பற்றிப் பேசிய தங்களின் செயலை எண்ணி வெட்கித் தலைகுனிந்தன. அடக்கமும் பணிவும் பெருமையைத் தேடித் தரும் என்பதை




ராஜா!

உணர்ந்தன. இப்போது அவை பாகற்காயைப் பார்த்த பார்வையில் வெறுப்பில்லை. நட்புடன் சிரித்தன. பாகற்காயும் நடந்ததை மறந்து மற்ற காய்கறிகளுடன் சேர்ந்து கொண்டது!

ஜி. சாயிலெட்சுமி, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மேல்நிலைப் பள்ளி, அரியகுளம்





காமராஜர்

காமராஜர், ஒவ்வொரு முறையும் சுற்றுலா சென்று வரும்போது ஒரு திட்டத்துடன் வருவார். அவ்வாறு ஒருமுறை செல்லும்போது மாடு மேய்க்கும் ஒரு சிறுவனைப் பார்த்து ''ஏன் தம்பி மாடு மேய்த்துக் கொண்டு இருக்கிறாய்?'' என்று கேட்டார். அப்போது அவனுடைய அப்பா ''மாடு மேய்த்தால் ஒருவேளை சாப்பாடு கிடைக்கும்'' என்றார். அதிலிருந்துதான் காமராஜர் மதிய உணவு திட்டத்தை ஆரம்பித்தார். அதனால் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

- ப.ஜெயக்குமார், பத்தாம் வகுப்பு காமராஜர் மே.நி. பள்ளி, நம்பியூர்.



ஒரு நிருபர் இந்திரா காந்தியிடம் இப்படிக் கேட்டார். ''ஒரு பெண்மணியால் நாட்டை ஆள முடியுமா?''

அதற்கு இந்திரா காந்தி சொன்ன பதில், *"I am not woman but human."*

- வே.தனசேகர், கும்மிடிப்பூண்டி

இந்திரா காந்தி




வகுப்பறையில் நுழைந்த ஆசிரியர், தரையில் வேர்க் கடலைத் தோல்கள் கிடப்பதைக் கண்டு மாணவர்களிடம் அவற்றை எடுத்தெறியச் சொன்னார். ஒரு சிறுவன் மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான். 'தான் வேர்க்கடலையைத் தின்னாததால் அவற்றைப் பொறுக்கி

திலகர்

இந்தியா - பாகிஸ்தான் இடையே உள்ள மிக உயர்ந்த அரணான பதினேழாயிரம் அடி உயரமுள்ள, பனி படர்ந்த சியாசின் மலைப்பகுதிக்குச் சென்று வந்த முதல் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள்!

- ஆர். விஷ்ணுப்பிரியா,
பதினொராம் வகுப்பு,
ஸ்ரீ ஜெயேந்திரா சரஸ்வதி
வித்யாலயா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சிங்காநல்லூர்.



அப்துல்கலாம்



கி.வா.ஜகந்நாதன்

தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன் வீட்டில் விசாலம் என்ற வேலைக்காரப் பெண்மணி இருந்தாள். அவள் உடல் சற்று பருமனானது. ஒருநாள் கி.வா.ஜ., சில நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அவர் மனைவி, ''சற்று தள்ளி உட்காருங்கள். விசாலம் பெருக்க வேண்டும்'' என்றார்.

உடனே கி.வா.ஜ., ''இன்னுமா விசாலம் பெருக்க (பருமனாக) வேண்டும்?'' என்று சிலேடையாகக் கேட்டார்.

- ஜி.சாயிலெட்சுமி, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மேல்நிலைப் பள்ளி,
அரியகுளம்

ஏறிய முடியாது' என்றான். அவன் பொய் சொல்வதாக எண்ணிய ஆசிரியர், பிரம்பால் அடி கொடுத்து, அன்று மாலை அவனது தந்தையையும் சந்தித்துப் பேசினார். அவன் தந்தை ''அவன் பொய் பேச மாட்டான்'' என்றார். அச்சிறுவன்தான் பின்னாளில் 'லோகமான்யர்' என்று அழைக்கப்பட்ட 'திலகர்'.

- யாழினி அன்புமணி,
(மாணவப் பத்திரிகையாளர்)

ஒவ்வொன்றுக்கும்
பரிசு தலா
ரூ 25/-



கேள்வி கேள்; பொருளைச் சொல்!

தஸ்மிலா, கீழக்கரை

வீட்டில் கிடைக்கும் சின்னச் சின்னப் பொருட்களை (உ-ம்: பை, பந்து, பேனா, பொம்மை, தட்டு...) நடுவே வைக்கவும். விளையாடுபவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்துகொள்ளவும். ஒரு குழுவினர் அந்தப் பொருட்களில் ஒன்றை மனத்தில் நினைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த குழுவினர் சிறு சிறு வினாக்களை எழுப்பவும். அதற்கு முதல் குழு ஆம் / இல்லை என்று மட்டுமே பதில் சொல்வார்கள். (உதாரணமாக, விளையாட்டுப் பொருளா? என்று கேட்க, பந்தாக இருந்தால் ஆம் என்றும், வேறு பொருளாக இருந்தால் 'இல்லை' என்றும் சொல்ல வேண்டும்.) ஐந்து கேள்விகள் மட்டுமே கேட்டு, எதிர் குழுவினர் நினைத்த பொருளைக் கண்டு பிடிக்க வேண்டும். சரியாக கண்டுபிடிக்கும் குழுவுக்கு ஐந்து மதிப்பெண்கள். அடுத்த சுற்றில், மற்றொரு குழு மனத்தில் நினைக்க, முதல் குழு கேள்வி கேட்டு கண்டுபிடிக்க வேண்டும். வெகு சுவாரஸ்யமான விளையாட்டு இது. விளையாடி மகிழுங்கள்!



அசைந்தாடி வரும் ஆழித்தேர்!



திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் முக்கிய விழாவான 'ஆழித்தேரோட்ட விழா' ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம்.

அலங்கரிக்கப்படாத ஆழித்தேரின் உயரம் 30 அடி. விமானம் வரை தேர் சீலைகளால் அலங்கரிக்கப்படும் பகுதி 48 அடி, விமானம் 12 அடி, தேர் கலசம் 12 அடி என மொத்தம் 96 அடி உயரத்தில் மிகப் பிரம்மாண்டமாய் ஆழித்தேர் காட்சி தரும்.

ஆழித்தேரின் நான்கு சக்கரங்களும் இரும்பால் ஆனவை. இச்சக்கரங்கள் 'ஹைட்ராலிக் பிரேக்' கொண்டு இயக்கப்படுகின்றன. இவற்றின் எடை மட்டும் 220 டன்கள். அலங்கரிக்கப்பட்ட தேரின் மொத்த எடை 300 டன்கள்.



திருவாரூர் ஆழித்தேர் வடம் பிடிக்க இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவர். இந்த 'ஆழித்தேர்' ஆசியா கண்டத்திலேயே மிகவும் உயரமான தேர். முன்பு இந்த தேரினை இழுக்க மூன்று நாட்களாகும். இப்பொழுது சக்கரத்துள் பசையிட்டு இரும்பு குண்டுகள் வைத்து, B.H.E.L ஹைட்ராலிக் பிரேக் உதவியுடன் தேர் எளிதாக இழுக்க முடிகிறது. ஆனாலும் தேர் சிறிது தூரமே நகரும். பின்னால் 2 புல்டோசர்கள் தள்ள தேர் நகரும். தேர் சென்ற இடத்தில் பள்ளம் இருக்கும்!

- த.க.தமிழ்பாரதன்,
வ.சோ.ஆண்கள் மே.நி. பள்ளி,
திருவாரூர் - 610 001

(இதுபோல் நீங்களும் உங்கள் ஊரின் சிறப்பான விஷயத்தை எழுதியனுப்பலாம்!)





எஸ். விவேக்,
எட்டாம் வகுப்பு,
நா.சு.வி.வி. ஆண்கள் மேல்நிலைப்
பள்ளி, பட்டிவீரன் பட்டி





த.கவின்,
மூன்றாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர்,
சேலம்

உங்கள்



ஏ.சாந்தி,
பத்தாம் வகுப்பு,
ஏ.பி.சி. வீரபாகு மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி



அ. சார்லஸ்,
ஐந்தாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஃப்
வித்யாலயா
மெட்ரிகுலேஷன் பள்ளி,
மணலி

ஜாலி வண்ணம்!



ஆர். லீசா டாஸ்,
ஐந்தாம் வகுப்பு,
தாமான் மெலாவாத்தி தமிழ்ப்
பள்ளி,
கோலாலம்பூர், மலேசியா



எஸ்.ஹரீஸ்,
நான்காம் வகுப்பு,
மான்ட்ஃபோர்ட் பள்ளி,
திருச்சி



விடுகதை

I 1) காலையில் ஊதும் சங்கு;
கறி சமைக்க உதவும் சங்கு - அது என்ன?

2) கிட்ட இருக்குது பட்டணம்;
எட்டிப் பார்க்க முடியலை - அது என்ன?

3) வெளுத்த ஆளுக்கு
கருத்த தலைப்பாகை - அது என்ன?

4) ஊரெல்லாம் சுற்றி வருவான்;
வீட்டுக்குள் வரவே மாட்டான் - அவன் யார்?

- வி.பிரமோத்குமார், ஐந்தாம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, படாளம்.

II 1) மரக்கிளையைச் சுமந்தபடி மனம் போலப் பயணம் - அது என்ன?

2) வயிறு புடைக்கத் தின்றால்தான் நிமிர்ந்து நிற்பான் - அவன் யார்?

3) காட்டில் பச்சை; கடையில் கறுப்பு; வீட்டில் சிவப்பு - அது என்ன?

4) கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ - அது என்ன?

- பி.சர்வேஸ்வரன், மதுரை



விடைகள்

I. 1) சேவல்
2) முதுகு
3) தீக்குச்சி
4) செருப்பு

II. 1) மான்
2) கோணிப்பை
3) மரம், கரி, நெருப்பு
4) உப்பு

வெளுத்த ஆளு, கருத்த தலைப்பாகை!









வணக்கம் பலவிதம்!

வணக்கம் - தமிழ்
நமஸ்தே/நமஸ்கார் - ஹிந்தி
ஹலோ - ஆங்கிலம்
நமஸ்காரம் - மலையாளம்
போன்ஜூர் - பிரெஞ்ச்
குட்டன் டேக் - ஜெர்மனி
நின்ஹோ - மண்டாரின்
சாட் ஸ்ரீ அகல் - பஞ்சாபி
நொமோஸ்கார் - பெங்காலி
ஆலன், வாசாலன் - அரபிக்
அஸ்ஸலாமு அலைக்கும் - உருது

- என். லோகேஷ்வர், ஆறாம் வகுப்பு,
பெத்தி செமினேர்
ஹையர் செகண்டரி ஸ்கூல்,
புதுச்சேரி











- யானைகள் சுமார் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை.
- யானைகள் 14 வயதில் இனப்பெருக்கத்துக்குத் தயாராகும்.
- யானை 50 வயது வரை, 4 வருடங்களுக்கு ஒருமுறை குட்டி ஈனும்.
- யானை 70 வருடங்கள் வாழும்.



யானை...

★ தெரியுமா? ★



- யானை தன் குட்டியை மிகச் சிறப்பாக 10 வருடங்கள் வரை பராமரிக்கும்.
- யானைக் குட்டி பிறந்ததும் 100 கிலோ எடை இருக்கும்.
- யானைக் குட்டி 3 அடி உயரம் இருக்கும்.
- யானைக் குட்டி 15 லிட்டர் பால் குடிக்கும்.
- யானையின் துதிக்கையில் ஒரு லட்சம் தசைகள் உள்ளன.
- யானையின் உடலில் 639 தசைகள் உள்ளன.
- பெண் யானை, ஆணைவிட புத்திகூர்மை உடையவை.
- யானையின் துதிக்கையில் நான்கு லிட்டர் நீர் கொள்ளும்.
- யானைகளுக்கு 20 விலா எலும்புகள் உள்ளன.
- யானையின் உடல் வெப்பம் 97.5°F
- யானை சுவாசிக்கும்போது நிமிடத்துக்கு 310 லிட்டர் காற்றை உள்ளிழுக்கும்.
- யானையின் இதயத் துடிப்பு ஒரு நிமிடத்துக்கு நிற்கும்போது 28; உட்கார்ந்திருக்கும்போது 32. சுவாசம், நிமிடத்துக்கு நிற்கும்போது 10; உட்கார்ந்திருக்கும்போது 5.

- அ.அனீஸ் ஃபாத்திமா
(மாணவப் பத்திரிகையாளர்)



யானை...

வண்ணம் தீட்டுங்கள்

இங்குள்ள படத்தை
உங்கள் கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க குட்டீஸ்!

ஓவியம்: கு.நித்யானந்தன்
(மாணவப் பத்திரிகையாளர்)



சிரிப்பலை





''நடுராத்திரி திருடன் கதவைத் தட்டும்போது தூங்கிக்கிட்டிருந்த வீட்டுக்காரர் முதல்ல எதைத் திறப்பாரு?''

''ஜன்னலை...!''

''இல்லே... அவரோட கண்களைத்தான் முதல்ல திறப்பாரு!''

- ச.ஆ.கேசவன்,
இனாம் மணியாச்சி

''நான் பெரியவனானதும் பாட்டி வடை சுட்ட கதையை பிரமாண்ட சினிமாவா எடுப்பேன்.''

''எப்படி?''

''வடையை டினோசர் தூக்கிட்டுப் போற மாதிரி.''

- அ.பேச்சியப்பன்,
ராஜபாளையம்



வாங்GO வணக்COME...

''யாராவது வந்தால் 'வாங்கோ'ன்னு சொல்றதைவிட 'வணக்கம்'னு சொல்றதுதான் நல்லது. ஏன்?''

''வாங்கோ'வில் 'Go' இருக்கு. 'வணக்கம்'ல் 'Come' இருக்கே!''

- க.ஜெயராம்,
பதினொராம் வகுப்பு,
புனித அன்னாள் மே.நி. பள்ளி,
திண்டிவனம்





''டேய் சோமு, ரவி எதற்காக நெருப்பைத் தின்றான்?''

''டாக்டர் எதையும் சூடா சாப்பிடணும்னு சொல்லியிருக்காராம்!''

- வி.திலக்ராஜ்குமார்,
11ஆம் வகுப்பு, ஸ்ரீ சாரதா
பாலமந்திர் ஆண்கள் பள்ளி,
சேலம்

முந்திரிக் காட்டுக்கும் சந்தனக் காட்டுக்கும் போட்டியாம்
முதலில் மானு மட்டையடிக்கும் காட்சியாம்
சந்தனக் காட்டுச் சிறுத்தையண்ணா கேப்டனாம்
சங்குநிற முயலு அங்கே கீப்பராம்



★ கதைப் பாடல் ★

முந்திரிக் காட்டுக்குச் சிங்கம் கேப்டனாம்
முள்ளம் பன்றி அவங்க டீம் கீப்பராம்
சின்ன யானை போட்ட பந்து சுழலுதாம் - அதை
சிக்ஸருக்கு மானு தூக்கி அடிக்குதாம்



கன்னங் கருத்த யானை மீண்டும் போட்டதாம்
கண்டபடி அடிக்க மானு நெனைச்சதாம்
சின்னப் பந்து உயரத்திலே பறந்ததாம்
சிவிங்கி அதை லாவகமாய்ப் புடிச்சதாம்

குள்ளநரி நடுவர் அவுட் தர மறுக்குதாம்
கோபம் கொண்ட முயலும் துள்ளிக் குதிக்குதாம்!
மெல்ல நரி முயலைப் பார்த்து மிரட்டுதாம்
மொத்தத்துல ஒன்சைடா போகுதாம்

வெள்ளை மேகம் இதனைப் பார்த்து கறுத்ததாம்
வேகமாக மழையை மண்ணில் பொழிந்ததாம்
கள்ளத்தனம் கொண்ட ஆட்டம் நின்றதாம்
காட்டுக்குள்ள அமைதி மீண்டும் வந்ததாம்!

கிரிக்கெட்!

- எம்.நவினா,
இரண்டாம் வகுப்பு,
டி.ஏ.கே.என்.ஆர்.
துவக்கப் பள்ளி,
இராசபாளையம்



பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!



அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.



பேசும் நிலா!

நாகை மாவட்டம், ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் செல்வி. ப.தங்க நிலா. இவர் வட்டார அளவில் நடந்த பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். ''உலக அறிவியல் தின விழா''வில் உரை நிகழ்த்தி சான்றிதழும், கோப்பையும் வென்றுள்ளார். தங்கநிலாவின் பேச்சுத் திறன் மேலும் வெற்றியடைய வாழ்த்துவோம்!


தமிழ்நாடு அரசு
தொடக்கக் கல்வித்துறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

★ சாதனைத் தளிர்கள் ★



Government of Tamil Nadu
DEPARTMENT OF ARTS & CULTURAL - RUDHRA SHANTHI YOGALAYA
AMIRTHAM SOCIAL SERVICE TRUST
12th STATE LEVEL YOGA COMPETITION & III[rd] YOGA CONFERENCE
CERTIFICATE OF MERIT

யோகா வாசன்!

திருச்சிராப்பள்ளி செயின்ட் பிரான்சிஸ் ஸ்கூலில் இரண்டாம் வகுப்பு படிப்பவர் எஸ்.கே.வாசன். இவர் மாநில அளவில் நடந்த யோகா போட்டியில் பொதுப் பிரிவில் மூன்றாவது இடம் மற்றும் சிறப்புப் பிரிவில் முதலிடம் பெற்று அதற்கு பரிசாக தங்க நாணயம் பெற்றுள்ளார். இவர் யோகாவில் நாற்பது வகை பயிற்சிகளையும் மேற்கொள்வார். இவர் 300 ஆணிகள் உள்ள பலகையிலும், அறுபது முட்டைகள் உள்ள பெட்டியிலும் பத்மாசனம் செய்யக் கூடியவர். யோகாவில் சாதனை செய்வதே இவர் விருப்பம். இவர் விருப்பம் வெற்றியடைய வாழ்த்துவோம்!



சூப்பர் ஸ்ருதி!



குத்தாலம், ராஜ் வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் முதலாம் வகுப்பு படிப்பவர் இர.ஸ்ருதி. இவர் பொது அறிவு துறையில் அதிக ஈடுபாடு உள்ளவர். ஜூனியர் ஹார்லிக்ஸ் நிறுவனம் நடத்திய மாறுவேடப் போட்டியில் கலந்துகொண்டுள்ளார். தொடர்ந்து மூன்று வருடங்களாக பள்ளியில் முதல் மாணவியாக வந்து Merit சான்றிதழையும் பெற்றுள்ளார். இவரின் திறமைக்காக பாரதிய கேந்திர நிறுவனம் 'யுவ கலா பாரதி' விருது அளித்தது. இவரின் திறமை மேலும் உயர கரவொலி செய்வோம்!



Inner wheel club of Mayuram
Junior Horlicks
Certificate of Appreciation
CONSOLATION



நியாயமா அம்மா?

மு.நடராசன்

"அம்மா, இங்கே பாருங்கள்." மகிழ்ச்சியோடு விடைத்தாளைத் தாய் ஈஸ்வரியிடம் காட்டினான் திவாகர்.

அதை வாங்கிப் பார்த்த ஈஸ்வரிக்கு மகிழ்ச்சி. முதல் ஐந்து கணக்குகள் மட்டுமே தவறு! மற்றவை அனைத்தும் சரி.

சென்ற தேர்வில்கூட கணிதப் பாடத்தில் தோல்வியடைந்திருந்தான். அதற்காக தந்தை கண்டித்தார்.

திவாகர் நன்கு ஓவியம் வரைவான். ஆனால், படிப்பில் சுமார்தான். திவாகரின் தங்கை வேல்விழி படிப்பில் படு சுட்டி. திவாகர் படிக்கும் பள்ளியில்தான் வேல்விழியும் படிக்கிறாள்.

அன்று மாலை பள்ளி விட்டு வந்த வேல்விழி, தாய் ஈஸ்வரியிடம் வந்து, "அம்மா திவாகரைப் பற்றி அவன் வகுப்பில் படிக்கும் என் தோழி ஒரு விஷயம் சொன்னாள்" எனக் கூறினாள்.

"என்ன சொன்னாள்?"

"கணக்குத் தேர்வில் திவாகர், தனக்கு முன் அமர்ந்து எழுதிய மாணவனைப் பார்த்துக் காப்பியடித்திருக்கிறான். இதைக் கண்டுபிடித்த ஆசிரியர், திவாகரைக் கண்டித்திருக்கிறார்."

வேல்விழி கூறியதைக் கேட்ட ஈஸ்வரிக்கு மனம் கனத்தது. விடைத்தாளில் முதல் பக்கத்தில் இருந்த கணக்குகள் மட்டும் தவறாய் இருந்ததும், அடுத்த பக்கங்களில் இருந்தவை சரியாய் இருந்ததற்குமான காரணம் புரிந்தது.

'படிப்பில் பின்தங்கியிருப்பது என்பது ஒரு சிலருக்கு இயல்பு. ஆனால் உரிய முயற்சியின் மூலம் முன்னேற்றம் பெற முடியும். இந்த காப்பியடிக்கும் பழக்கம் சொந்த முயற்சியையே முறியடித்து விடுமே... சற்று பக்குவமாய்த்தான் அவனை வழிக்குக் கொண்டுவர வேண்டும்.' ஈஸ்வரி மனத்தில் நினைத்துக் கொண்டார்.

"அம்மா, இந்த சிறுவர் இதழைப் பாருங்கள். ஓவியப் போட்டி அறிவித்திருக்கிறார்கள். நான் கலந்துகொள்ளட்டுமா?" ஆர்வமாய்க் கேட்டான் திவாகர்.

"கலந்துகொள் திவாகர்" என்றார் ஈஸ்வரி.

திவாகர் கடுமையாக முயற்சித்து, கொடுக்கப்பட்டிருந்த தலைப்புக்கு அழகாக ஓவியம் வரைந்து முடித்தான். அதை அம்மாவிடம் கொடுத்து பத்திரிகைக்கு அனுப்பச் சொல்லிவிட்டு, பள்ளிக்குச் சென்றான்.

அன்று பத்திரிகை அலுவலகத்திலிருந்து வந்த கடிதத்தைப் படித்த

வனுக்கு ஒரே அதிர்ச்சி! ஆம், கடிதம் அவனுடைய தங்கை வேல்விழிக்கு எழுதப்பட்டிருந்தது.

'தாங்கள் ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறீர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறோம். அடுத்த இதழில் தங்களின் ஓவியம் பிரசுரமாகும். தங்களின் புகைப் படம் ஒன்றை அனுப்பி வைக்கவும்.'

உடனே கோபத்துடன் தாய் ஈஸ்வரி யைப் பார்த்து, ''நான் வரைந்த ஓவி யத்தை தங்கையின் பெயரில் அனுப்பி யுள்ளீர்களே, என்னுடைய உழைப்பிலா அவளை உயர்த்த நினைப்பது? இது நியாயமா?'' என்று கத்தினான் திவாகர்.

''உன் ஓவியத்தைத் தங்கை பெயரில் அனுப்பியது தவறு என்றால், அடுத்தவன் படித்து தேர்வில் எழுதி யதை, அப்படியே காப்பியடித்து மதிப்பெண் பெற்று, அதை நீ வாங்கிய மதிப்பெண் என்று கொண்டு வந்து காட்டினாயே அது மட்டும் தவறில் லையா?'' என்றார் அம்மா.

நெற்றிப் பொட்டில் அறைந்தது





போல் இருந்தது திவாகருக்கு. பதில் ஏதும் சொல்ல முடியாமல் அங்கிருந்து சென்றான்.

திவாகர் அடுத்த சில நாட்கள் யாரிடமும் பேசவில்லை. தாய் ஈஸ்வரியும் அதைப் பெரிதாய் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த மௌனம் அவனைச் சிந்திக்க வைக்கும் என உறுதியாய் நம்பினாள்.

அன்று மாலை பள்ளியிலிருந்து வந்த திவாகருக்கு ஒரே ஆச்சர்யம். ஆம்! அவனது புகைப் படத்துடன் அவன் வரைந்த ஓவியம் அந்த சிறுவர் இதழில் வெளியாகி இருந்தது. ஓவியத்தின் அருகில் வெளியிடப்பட்டிருந்த அவனது குறிப்புரையைப் படித்தான். அதில் இயற்பெயர் திவாகர், புனைபெயர் வேல்விழி என்று இருந்தது. அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

''நான்தான் உனக்கு 'வேல்விழி' என்று புனைபெயர் சூட்டினேன்'' என்றார் அம்மா.

''அம்மா, நிச்சயம் இனி தேர்வில் காப்பியடிக்க மாட்டேன். என்னுடைய உழைப்பில் முன்னேற முயற்சிப்பேன். அதுதான் உண்மையான மகிழ்ச்சியையும் பெருமையையும் தரும் என்பதை நன்றாகவே உணர்ந்துகொண்டேன்'' திவாகர் உறுதியாய்க் கூறினான்.

பரிசுப் பெட்டி



இந்தப் பெட்டிக்குள் ஒரு ஜோக் எழுதி, கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

முடிவு தேதி: **10.6.08**

பெயர்: ....

வகுப்பு: ....

பள்ளி: ....

....


வீட்டு முகவரி: ....

கண்டுபிடி



1 முதல் 36 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யார் என்பது தெரியும்!

புள்ளிகளை இணையுங்கள்!





✪ கி.பி. 1857 - ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிறுவப்பட்ட 'செஃபீல்டு கிளப்'தான் உலகின் மிகப் பழமையான கால்பந்து கிளப்பாகக் கருதப்படுகிறது.

✪ 1878 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நிறுவப்பட்ட 'டல்ஹௌசி கால்பந்து கிளப்'தான் இந்தியாவின் மிகப் பழமையான கால்பந்து கிளப்.

✪ 1904 ஆம் ஆண்டு மே மாதம் பாரிஸ் நகரில் (பிரான்ஸ்) 'சர்வதேச கால்பந்து ஃபெடரேஷன்' (FIFA) தொடங்கப்பட்டது.

✪ பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், நெதர்லாந்து, பெல்ஜியம், சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய ஏழு நாடுகளும் இணைந்து FIFA வைத் தொடங்கின.

✪ 1908 ஆம் ஆண்டு லண்டனில் (இங்கிலாந்து) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் முதன்முதலாக கால்பந்து விளையாட்டு சேர்க்கப்பட்டது.

✪ 1930 ஆம் ஆண்டில் முதல் உலகக் கோப்பை கால்பந்து போட்டியானது உருகுவே நாட்டில் நடைபெற்றது.

✪ உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் மிக விரைவாக கோல் போடுபவருக்கு 'கோல்டன் வாட்ச் விருது' வழங்கப்படுகிறது.

✪ உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அதிகமான கோல்களைப் போடுபவருக்கு 'கோல்டன் பூட் விருது' வழங்கப்படுகிறது.

✪ உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அரையிறுதி வரை வந்த முதல் ஆசிய நாடு 'தென்கொரியா' (2002).

✪ தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் கோப்பையான 'சந்தோஷ் டிராபி' 1941ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.



✪ 'சர் மன்மதாராய் சவுத்ரி ஆப் சந்தோஷ்' என்பவரது நினைவாக சந்தோஷ் டிராபி வழங்கப்படுகிறது.

✪ இந்தியாவின் மிகப் பழமையான கால்பந்து கோப்பை - 'டூரண்ட் கோப்பை'.

✪ 'சர் மொர்டிமர் டூரண்ட்' என்பவரது நினைவாக 'டூரண்ட் கோப்பை' வழங்கப்படுகிறது.

✪ 'பத்மஸ்ரீ விருது' பெற்ற இந்தியாவின் முதல் கால்பந்தாட்ட வீரர் - 'கோஸ்தா பீகாரி பால்' (1962).

✪ 'அர்ஜுனா விருது' பெற்ற இந்தியாவின் முதல் கால்பந்தாட்ட வீரர் - 'பி.கே.பானர்ஜி' (1961).

✪ சர்வதேச கால்பந்து போட்டியின் கால அளவு - 90 நிமிடங்கள்.

✪ கால்பந்தின் சராசரி எடை 14-16 அவுன்ஸ்கள்.

- வி.வேல்முருகன்,
முத்தம்பட்டிகேட்.



கால்பந்து








I. குறுக்கெழுத்துப் புதிர்

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புங்கள்:



இடமிருந்து வலம்:-

1. மூண்டாசுக் கவிஞர்.

4. வெற்றிலையுடன் சேர்த்துப் போடுவர்.

6. பஞ்சாங்கத்தின் ஒரு அம்சம். மறைந்தவருக்கும் வருடாந்திரம் உண்டு.

7. இந்திரனின் வாகனம்.

16. உணவு வகைகளுள் ஒன்று.

17. களைப்பு.

19. எல்லா விலங்குகளுக்கும் உண்டு; ஒரு பறவையின் பெயரிலும் உண்டு.

20. இதற்கு உதாரணம் நாய்.

22. ஆசிரியர்.

25. புள்ளி வைத்த காட்டு விலங்கு.

வலமிருந்து இடம்:-

8. தமிழ் முதல் மாதம்.

10. அழகை.......க்க வேண்டும்.

11. அதிகாரிகள் இதன் மேல் கையெழுத்திடுவர். அனைவரும் தனது பணியில். . பதிக்க வேண்டும்.

13. உலகம்.

14. இது ஒரு பழம்.

- ஜா. ரேவதி, திருச்சி



எத்தனை

15. புரதம் நிறைந்த தானியம்.

24. அமைதியானவர்.

மேலிருந்து கீழ்:-

1. கிருஸ்தவ ஆலயங்களில் இருப்பார்.

2. அழகுக்கு உதாரணமாய்க் கூறப்படுபவர்.

3. பயணம்.

4. மண்குடம்.

8. அம்மாவின் தங்கை.

9. கற்சிற்பம்.

11. சிப்பியின் குழந்தை

13. விருந்துகளில் தவறாமல் இடம்பெறும் இனிப்பு.

14. அரசர் இருக்குமிடம்.

19. ஆகாயம் வேறு பெயர்.

20. மிக மெதுவாக ஊர்ந்து செல்லும் பிராணி.

21. இதனால் தைக்கலாம்.

23. சுவை.

கீழிருந்து மேல்:-

12. மரத்துக்கு மரம் தாவும்.

22. நெடிலின் எதிர்.

24. எரிந்தபின் மிஞ்சுவது.

26. கெட்டது.



கால்கள்?

II. கணக்குப் புதிர்

a). ஒரு வீட்டில் ஏழு சிறுமிகள் உள்ளனர். ஒவ்வொரு சிறுமியிடமும் ஏழு பெட்டிகள் உள்ளன. ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் ஏழு பெரிய பூனைகள் உள்ளன. ஒவ்வொரு பெரிய பூனைக்கும் ஏழு சிறிய பூனைகள் உள்ளன. ஆக, அந்த வீட்டில் இருப்பவர்களின் மொத்த கால்களின் எண்ணிக்கையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

b) காலியாக உள்ள இடங்களில் 1, 2, 4, 5, 10, 20, 25, 50 மற்றும் 100 ஆகிய எண்களை நிரப்ப வேண்டும். அதேசமயம், மேல்கீழாக, இடவலமாக, குறுக்குவாட்டில் இப்படி எந்த வரிசையில் உள்ள மூன்று எண்களைப் பெருக்கினாலும் விடை 1000 என்று வர வேண்டும். 10 என்ற எண் ஒரு கட்டத்தில் நிரப்பப்பட்டிருக்கிறது. மற்ற எண்களை நிரப்புங்கள்!

	10	

- பி.பாரதி,
பன்னிரண்டாம் வகுப்பு,
செயின்ட் ஜோசப்
கான்வென்ட், ஆரணி

விடைகள் பக்கம்: 56

இரண்டு கிளிகள்!


கடைத் தெருவில் ஒருவன் இரண்டு கிளிகளை விற்றுக் கொண்டிருந்தான்.
கிளி வாங்கலையோ கிளி! அருமையான கிளிகள், பேசும் கிளிகள்!
அந்நாட்டு மன்னர் அந்தப் பக்கமாக வந்தார்.
கிளியின் விலை எவ்வளவு?
ஒரு கிளியின் விலை ஐநூறு ரூபாய், இன்னொரு கிளியின் விலை ஐந்து ரூபாய்.
அது என்ன, ஒன்று ஐநூறு ரூபாய், இன்னொன்று ஐந்து ரூபாய்? புரியலையே!

படக்கதை



இரண்டையும் வாங்கிச் செல்லுங்கள். உங்களுக்கே புரியும்!
மன்னர் இரண்டு கிளி களுடன் அரண்மனைக் குச் சென்றார்.
ஐநூறு ரூபாய் கிளிக்கூண்டை என் கட்டிலுக்கு அருகில் தொங்கவிடுங்கள்.
மறுநாள் அதிகாலை...
ராம்...ராம்... சீதாராம்.... மன்னரே வணக்கம்!
ஆகா! எவ்வளவு இனிமையாகப் பாடுகிறது.
அன்றிரவு அரண்மனையில்...
இன்று ஐந்து ரூபாய் கிளியை இங்கே தொங்கவிடுங்கள்.
ஆகட்டும் அரசே! அப்படியே செய்கிறேன்.


மறுநாள் அந்தக் கிளி -
டேய் தடியா... எழுந்திருடா!
யாரங்கே? இந்தக் கிளியைக் கொல்லுங்கள்.
அரசே அவசரப்படாதீர்கள்...
முதல் கிளி பேசியது...
இந்தக் கிளி என் உடன் பிறந்தவன்தான். என்னை ஒரு துறவி வாங்கிச் சென்றார். அங்கே பஜனைப் பாடல்களைக் கற்றுத் தந்தார்...
...இவனை ஒரு திருடன் வாங்கிச் சென்றான். அவன் பொல்லாதவன்! எல்லோரையும் திட்டுவான். அவனிடமிருந்து இவனும் கற்றுக்கொண்டான்.
இது இவனது தவறல்ல. இவன் இருந்த இடத்தின் தவறு. நல்ல இடத்தில் இருந்தால் நல்ல குணங்கள் வரும்.
நீ சொல்வது சரி! இவனை நல்லவனாக மாற்றுவோம்!



சோழர் உண்டியல்!


இந்தியாவிலேயே பள்ளிகள் அளவில் தொல்பொருள் அருங்காட்சியகம் அமைந்துள்ள ஒரே பள்ளி, ஈரோட்டில் உள்ள எங்கள் கலைமகள் கல்வி நிலையம்தான்! இது 1981 ஆம் ஆண்டு தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தில் கி.பி. 8, 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்கள், உலோகப் படிமங்கள், சோழர் காலத்தைச் சேர்ந்த உண்டியல், சிலம்பு, பல வடிவ பாக்கு வெட்டிகள், கி.பி.9,10 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், பழங்கால கல் ஆயுதங்கள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகள், நொய்யல்கரை நாகரிகப் பொருட்கள், சங்க கால சேர, சோழ, பாண்டிய, வேந்தர்களின் நாணயங்கள், முகலாயர்களின் நாணயங்கள், டச்சு, டேனிஸ், பிரெஞ்சு நாணயங்களும் உள்ளன. பல்வேறு நாடுகளிலிருந்தும் தொல்லியல் ஆய்வாளர்கள் இங்கு வருவதுண்டு!

- யாழினி அன்புமணி
(மாணவப் பத்திரிகையாளர்)

(இதுபோல் உங்கள் பள்ளி குறித்தும் சிறப்பான செய்தி இருந்தால் புகைப்படத்துடன் எழுதியனுப்புங்கள்!)







I. குறுக்கெழுத்துப் புதிர்

II. கணக்குப் புதிர்

a) ஏழு சிறுமிகளின்

கால்கள் = 7 X 2

= 14 கால்கள்

ஒரு சிறுமியிடம் உள்ள பெட்டிக்குள் இருக்கும் பூனைகளின் கால்கள்

= 7 X 7 X 7 X 4 = 1372

ஏழு சிறுமிகளிடமும் இருக்கும் பூனைகளின் கால்கள் = 7 X 1372

= 9604

மொத்த கால்கள் = 9604 + 14

= 9618 கால்கள்

b)

2	25	20
100	10	1
5	4	50

விடைகள் பக்கம்!



அன்பு நண்பர்களே...

'**கோ**குலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது.
இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

501) என். ராமச்சந்திரன், பத்தாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்.
502) ப.ஆகாஷ், எல்.கே.ஜி., எஸ்.என்.எம்.பள்ளி, ஆலாந்துறை.
503) சி.கவிஅரசி, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, செம்மேடு.
504) க.அசோகன், ஆறாம் வகுப்பு, ஜெயராணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்.
505) செ.பவித்ரா, 3ஆம் வகுப்பு, கிறிஸ்டினா நர்சரி பிரைமரி பள்ளி, சேலம்.
506) செ.ஸ்ரீவர்த்தன், எல்.கே.ஜி., கிறிஸ்டினா நர்சரி பிரைமரி பள்ளி, சேலம்.
507) இரா.சௌம்யா மணி, எட்டாம் வகுப்பு, ராஜ் மெட்ரிகுலேஷன் பள்ளி, மயிலாடுதுறை.
508) தி.நவீன்குமார், ஏழாம் வகுப்பு, சுவாமி விவேகானந்தா உயர்நிலைப் பள்ளி, நிலக்கோட்டை.
509) க.சந்தோஷ், 9ஆம் வகுப்பு, ஜெயராணி மெட்ரிக் மே.நி.பள்ளி, சேலம்.
510) ப.ஈஸ்வரி, ஆறாம் வகுப்பு, டால்ஸ்டாய் நினைவுப் பள்ளி, திருநெல்வேலி.
511) கு.இளந்திரையன், ஏழாம் வகுப்பு, பொ.வெ.க.நாயுடு மேல்நிலைப் பள்ளி, பொங்கலூர்.
512) எஸ்.ராமலிங்கம், ஆறாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளி, ஆலங்குளம்.



513) கு. அபிராமி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ நாச்சியார் மெட்ரிக் பள்ளி, ஆடையூர்.
514) வெ.கார்த்திக் பிரஜேஷ், மூன்றாம் வகுப்பு, எஸ்.ஆர்.டி.யுனிவர்சல் பள்ளி, சத்தியமங்கலம்.
515) சி. ரவிக்குமார், ஐந்தாம் வகுப்பு, நாளந்தா நர்ஸரி பிரைமரி பள்ளி, தஞ்சாவூர்.
516) ப.பத்மபிரியா, பதினொராம் வகுப்பு, பெ.சி.சிதம்பர நாயர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்.
517) சி.விக்னேஷ், நான்காம் வகுப்பு, டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
518) சு.அபிஷேக், ஐந்தாம் வகுப்பு, பாரத வித்யாலயா மெட்ரிக் உ.நி. பள்ளி, சென்னை.
519) ஜா.ரேவதி, பதினொராம் வகுப்பு, பெரியார்



மணியம்மை பெண்கள் மே.நி. பள்ளி, திருச்சி.

520) ரா.முரளி, ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.

521) இரா.ஜெகதீஷ், ஒன்பதாம் வகுப்பு, சேரன் பள்ளி, மதுரை.

522) இர.கவினி, மூன்றாம் வகுப்பு, எ.எல்.சி. பிரைமரி ஸ்கூல், மங்கலம்.

523) க.சண்முகசெல்வன், 5ஆம் வகுப்பு,ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, திருநெல்வேலி.

524) நா.அஸ்வின் நம்பி, எட்டாம் வகுப்பு, புனித ஜேம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.

525) இ.சி.பத்மஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு, சாவித்திரி வித்யசாலா இந்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.

526) ப.ரவிச்சந்திரன், ஒன்பதாம் வகுப்பு, கே.வி.கே.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பு.புளியம்பட்டி.

527) வீ.செல்வகுமரன், எட்டாம் வகுப்பு, ஏ.வி.எம்.மாரிமுத்து நாடார் மேல்நிலைப் பள்ளி, விளாம்பட்டி.

528) த.நான்சி செவன்னா, ஆறாம் வகுப்பு, அமுதம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

529) த.கவின், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீவித்யா மந்திர், சேலம்.

530) என்.கே.ஆனந்த், பத்தாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திரா மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி.

531) ரா.மோனிஷா, ஏழாம் வகுப்பு, ராஜா முத்தையா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கரூர்.

532) பி.பத்மநாதன், ஆறாம் வகுப்பு, சிக்ஷா மெட்ரிக் பள்ளி, சிட்லப்பாக்கம்.

533) மு.ஸ்வேதா, ஒன்பதாம் வகுப்பு, சேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, சோழிங்கநல்லூர்.

534) பா.கஜேந்திரக்குமார், ஏழாம் வகுப்பு, சுவாமி விவேகானந்தா உயர்நிலைப் பள்ளி, கோவில்பட்டி.

535) எஸ்.ராஜலக்ஷ்மி, 8ஆம் வகுப்பு, ரோஸிலி மே.நி.பள்ளி சென்னை.

536) ரா. மோகன், எட்டாம் வகுப்பு, செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி.

537) சு.ஜெயவிக்னேஷ்குமார், பத்தாம் வகுப்பு, ச.ச.வி.மேல்நிலைப் பள்ளி, மாதா பட்டணம்.

538) ஜி.கே.சுவாதி சர்மாரி, 5ஆம் வகுப்பு, ஸ்ரீவித்யா மந்திர், சேலம்.

539) ம.வெங்கடேசன், 11ஆம் வகுப்பு, அ.மே.நிலைப் பள்ளி, விசுவாசபுரம்.

540) நா.விக்னேஷ், ஏழாம் வகுப்பு, மெட்ரோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்.

541) எஸ்.பாரதி, 8ஆம் வகுப்பு, அ.பெ.ந.நி. பள்ளி, முத்தியல்பேட்டை.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....


புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

542) எஸ்.சிபி, விக்டோரியா மெட்ரிகுலேஷன்,சென்னை.
543) பா.விக்னேஷ், ஐந்தாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா மெட்ரிக் பள்ளி, மணலி.
544) மு.புவனேஷ்வரி, ஒன்பதாம் வகுப்பு, சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கரூர்.
545) கா. ஸ்ரீராகவ், ஏழாம் வகுப்பு, ஹோலி கிராஸ் மெட்ரிக் மே.நி. பள்ளி, சென்னை.
546) ரா.பாலாஜி, இரண்டாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி.
547) சு. பிரியங்கா, எட்டாம் வகுப்பு, திரு.சுந்தரவேல் நடுநிலைப் பள்ளி, தெற்கு பூலாங்குளம்.
548) எஸ். பிரணவ், இரண்டாம் வகுப்பு, ஆதித்யா வித்யாஸ்ரம், புதுச்சேரி.
549) இரா.சந்தீப், யு.கே.ஜி., நவபாரத் பள்ளி, மாங்காடு.
550) எஸ்.சிவகவிதா, 5ஆம் வகுப்பு, அ. பெ.ந.நி. பள்ளி, புதுச்சேரி.



காலம் உன்னைப் போற்றிடும்!

உப்பு விளையும் பூமியை
உற்று நன்றாய்ப் பார்த்திடு
உழவுக்கு உதவா நிலத்திலே
உப்பு நன்றாய் விளையுது!
கத்தும் கடலின் ஆழத்தில்
கண்டு எடுத்த சிப்பியின்
வயிற்றில் பிறந்த முத்துவோ
வளம் கொழிக்கச் செய்யுது!
எங்கே இருந்து வருகிறோம்
என்ப தல்ல முக்கியம்
என்ன செயலைச் செய்கிறோம்
என்பதுதான் முக்கியம்!
நல்ல செயலைச் செய்திடு
நாடு புகழ வாழ்ந்திடு
கரங்கள் யாவும் வணங்கிடும்
காலம் உன்னைப் போற்றிடும்!

\- மு.நடராசன்

தோட்டம்!

வீட்டுத் தோட்டம் போடு
வேண்டும் காய்கள் கிடைக்கும்!
பாத்தி கட்டி கீரைகள்
புசிக்க நோய்கள் பறக்கும்!

ஊட்டச் சத்து காய்கனி
உடலின் வலிமை பெருக்கும்!
மல்லி முல்லை பூக்களால்
நல்ல வாசம் கிடைக்கும்!

வட்டப் பூசணி சுரையும்
வானம் பார்த்து காயும்!
சோம்பித் திரியும் சிறுவரை
சுறு சுறுப்பாய் மாற்றும்!

\- கு.காளிமுத்து

கவிதைப்





பூங்கா



வாத்து!

குட்டி குட்டி வாத்து
குவா குவா வாத்து
தத்தி நடக்கும் வாத்து
தண்ணீரில் மிதக்கும் வாத்து!

வயலில அசையுது நாத்து
வரப்பில் தாவுது வாத்து
விண்ணை நிமிர்ந்து பார்த்து
விரைவாய் ஓடுது வாத்து!

தோட்டத்தில் வீசுது காத்து
பூக்கள் சிரிக்குது பூத்து
ஜோராய்ப் போகுது வாத்து
சொக்க வைக்குது வாத்து!

- மு.சாய்பிரபு,
எட்டாம் வகுப்பு,
பொன்னையா ராமஜெயம்
பொதுப்பள்ளி, தஞ்சாவூர்

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 5



பலே

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! இந்த மாதம் 'இன்சுலின்' என்ற மருந்தைப் பற்றித் தெரிந்துகொள்வோமா?

அடிப்படையில் இன்சுலின் என்பது ஒரு ஹார்மோன். நமது கணையத்தில் 'லங்கர்ஹார்ன்ஸ்' திட்டுகளில் உள்ள 'பீட்டா' செல்களில் இது சுரக்கிறது. ரத்தத்தில் உள்ள குளுக்கோஸை சரியான அளவில் வைத்துக்கொள்வது இதன் வேலை. கணையத்தில் இன்சுலின் சுரக்காவிட்டால் அல்லது சுரப்பது குறைந்தால், ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரித்துவிடும். அப்போது இதயம், சிறுநீரகம், மூளை, கண், நரம்புகள் போன்றவை பாதிக்கப்படும். இதைத்தான் 'சர்க்கரை நோய்' என்கிறோம்.

இந்நோய் பெரியவர்களுக்கு மட்டுமின்றி குழந்தைகளுக்கும் வருகிறது. குழந்தைகளுக்கு ஆயுள் முழுவதும் இன்சுலின் ஊசியைப் போட வேண்டும். இதைக் கண்டுபிடித்தவர் 'ஃப்ரெட்ரிக் கிராண்ட் பாண்டிங்.'

இவர் கனடாவில் 'ஒன்டாரியோ' மாகாணத்தில் 'அலிஸ்ட்டான்' எனும் ஊரில் பிறந்தார். 1916ல் 'டோரண்டோ' பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பை முடித்தார். முதல் உலகப் போரில் ராணுவ மருத்துவராகப் பணிபுரிந்தார். அப்போது சர்க்கரை நோயானது ஓர் உயிர்க்கொல்லி நோயாக இருந்தது. சர்க்கரை சாப்பிடுவதை அறவே தவிர்த்தால் மட்டுமே நோயை ஓரளவு கட்டுப்படுத்தலாம்; இல்லையென்றால் மரணம் உறுதி! ஆகவே, பாண்டிங் சர்க்கரை நோயாளிகளின் வாழ்வில் நம்பிக்கை ஒளி தருவதற்கு புதிய மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலானார்.

'உடலில் இன்சுலின் குறையும்போது ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகி சர்க்கரை நோய் வருகிறது என்பதால், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே வழி, குறையும் இன்சுலினை உடலுக்குள் செலுத்துவதுதான்' என்ற முடிவுக்கு வந்தார், பாண்டிங்.

நாய், கன்றுக்குட்டி போன்ற விலங்குகளின் கணையநீரைச் சுத்தப்படுத்தி

டாக்டர் கு.கணேசன்

பாண்டிங்!

மனித உடலுக்குள் செலுத்திப் பார்த்தார். இந்த முயற்சி தோல்வி அடைந்தது. காரணம், உடலில் ஏற்கெனவே உள்ள இன்சுலின் புரதக்கூறுகள் இந்தக் கணையநீர் புரதக்கூறுகளை எதிர்த்து விரட்டின.

இதற்குப் பதிலாக, 'கணைய நீரிலிருந்து இன்சுலினைத் தனியாகப் பிரிக்க முடியுமா?' என யோசித்தார். பல மருத்துவ ஆராய்ச்சியாளர்களுடன் கலந்தாலோசித்தார். பல மருத்துவ ஏடுகளைப் புரட்டினார். அந்தச் சமயத்தில் இன்சுலின் பற்றி டாக்டர் 'மோஸஸ் பேரன்' எழுதியிருந்த கட்டுரை அவருக்கு அறிமுகமானது. வெளியிலிருந்து இன்சுலினை உடலுக்குள் அனுப்புவதற்கு முன்னால், உடலில் ஏற்கெனவே சிறிய அளவில் சுரந்து கொண்டிருக்கும் கணைய நீரினைச் சுரக்கவிடாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் புதிய இன்சுலின் எந்தவித எதிர்ப்புமின்றி இயங்கும் என்ற தகவலை அதில் தந்திருந்தார்.

இதை எப்படிப் பரீட்சித்துப் பார்ப்பது என்று பாண்டிங் யோசித்துக் கொண்டிருந்தபோது 'மேக்னியாட்' என்ற மருத்துவ ஆராய்ச்சியாளர் அவருக்கு அறிமுகமானார். இவர் பாண்டிங்கின் ஆராய்ச்சிக்காக புதிய ஆய்வுக் கூடத்தை அமைத்து தந்து, தம்முடைய உதவியாளர் 'சார்லஸ் பெஸ்ட்' என்பவரையும் துணைக்கு அனுப்பினார்.





இப்போது இன்சுலினைக் கண்டுபிடிக்கும் பாண்டிங்கின் ஆராய்ச்சிகளைகட்டியது. அதற்கு இரவு பகல் பாராமல் உழைத்தார். பாண்டிங், தம்முடைய புதிய ஆராய்ச்சியின் முதல் படியாக, சர்க்கரை நோயுள்ள நாயின் உடலிலிருந்து கணையத்தை அகற்றி விட்டார். பின்பு ஆரோக்கியமான ஒரு நாயின் கணையத்தை அகற்றி, அதில் உள்ள பீட்டா செல்களிலிருந்து ஒரு திரவத்தைப் பிழிந்து, அதை சர்க்கரை நோயுள்ள ஒரு நாய்க்கு ஊசிமூலம் செலுத்தினார். என்ன ஆச்சரியம்! அந்த நாயின் சர்க்கரை நோய், சிறிது சிறிதாகக்




குறையத் தொடங்கியது. இதைப் பல நாய்களிடம் பரீட்சித்துப் பார்த்தார். எல்லா நாய்களுக்கும் நோய் குறைந்தது. பிறகு மனிதர்களிடமும் முயற்சித்து வெற்றி பெற்றார்.

இவ்வாறு 1921ல் பாண்டிங் கணையத்திலிருந்து தாம் பிழிந்தெடுத்த திரவத்துக்கு 'ஐலெட்டின்' என்று பெயரிட்டார். ஆனால், மேக்ளியாட் அதற்கு 'இன்சுலின்' என்று பெயரை மாற்றினார். இன்றைக்கு இன்சுலின் தயாரிப்பிலும் அதைச் செலுத்தும் முறையிலும் பல்வேறு முன்னேற்றங்கள் வந்துவிட்ட போதிலும், பாண்டிங் கண்டுபிடித்ததுதான் அடிப்படை!

இனி அடுத்த மாதம் பேசுவோமா, குட்டீஸ்? பை!



மருத்துவ மேதைகள் : கிருஷ்டியன் பர்னார்டு



'உலகிலேயே மனிதனுக்கு இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்த முதல் மருத்துவ மேதை' என்று போற்றப்படும் 'கிருஷ்டியன் பர்னார்டு' தென்னாப்பிரிக்காவில் 1922ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் 'பிபோர்ட் வெஸ்ட்' எனும் ஊரில் சாதாரண விவசாயியின் மகனாகப் பிறந்தார். கேப்டவுன் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். இவர் அறுவைச் சிகிச்சை செய்வதில் இயற்கையிலேயே அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் சிறுநீரக மாற்று அறுவை செய்வதில் ஆர்வம் காட்டினார். முதன்முதலில் தென்னாப்பிரிக்காவில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்த பெருமை இவரையே சாரும். பின்பு இதய மாற்று அறுவைச் சிகிச்சையின் மீது அவரது ஆர்வம் திரும்பியது. அதன் முதல் படியாக ஐம்பதுக்கும் மேற்பட்ட நாய்களிடம் இருதய மாற்று அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார். மனிதரிடையே இதய மாற்று அறுவை செய்துகொள்வதற்கு மக்கள் தயாராக இல்லை. ஆகவே, தகுந்த சமயத்துக்குக் காத்திருந்தார். அந்த நல்ல நாளும் வந்தது. ஐம்பத்தி ஐந்து வயது நிரம்பிய 'லூயிஸ் வாஸ்கன்ஸ்கி' என்பவருக்குக் கடுமையான இதயநோய். அவருடைய இதயத்தை உடனடியாக மாற்றினால்தான் உயிர் பிழைக்க முடியும் என்ற நிலை. மாற்றுவதற்கு இதயம் தர யாராவது முன் வர வேண்டுமே? ஒரு சாலை விபத்தில் 'மூளைச் சாவு' அடைந்திருந்த 'டேனிஸ் லார்வால்' எனும் பெண்ணின் இதயத்தைத் தருவதற்கு அவருடைய தந்தை முன் வந்தார். உடனே பர்னார்டு 30 உதவியாளர்களின் துணையுடன் 1967ம் ஆண்டு டிசம்பர் 3ம் நாள் லூயிஸ் வாஸ்கன்ஸ்கி இதயத்தில் டேனிஸ் லார்வால் இதயத்தைப் பொருத்தி, முதன் முதலில் மனிதனுக்கு மனிதன் இதய மாற்றுச் சிகிச்சை செய்து, மருத்துவ உலகில் புதிய வரலாறு படைத்தார்.


சிறந்த பக்தன்
ஒருமுறை கிருஷ்ணனும் அர்ஜுனனும் மாறுவேடத்தில் சென்று கொண்டிருந்தபோது -
கிருஷ்ணா! அங்கே ஒரு வயதான பிராமணர் காய்ந்த புல்லை உண்பதைக் கண்டாயா?
ஆம், அவரிடமே சென்று கேட்கலாம், வா.
போற்றுதற்குரிய பிராமணரே, தாங்கள் ஏன் காய்ந்த புல்லைத் தின்று கொண்டிருக்கிறீர்கள்?
உயிருள்ள ஜீவன்களைத் துன்புறுத்தக்கூடாது.
இறைவன் எதிலும் இருக்கிறார்.
பிறகு ஏன், தாங்கள் இந்த வாளை வைத்திருக்கிறீர்கள்?
ஓ! நான் நான்கு பேரைக் கொல்லப் போகிறேன், அதற்காகத்தான்.
என்ன?


யார் அவர்கள்?
நாரதன், பிரகலாதன், பாஞ்சாலி மற்றும் அர்ஜுனன்.
ஆ!
எனக்கு மட்டும் வாய்ப்பு கிடைத்தால் அவர்களைக் கொன்றுவிடுவேன்.
நற்பண்புகள் மிக்க நீங்கள் இவ்வாறு சொல்வதை எங்களால் நம்ப முடியவில்லை.
தாங்கள் அவர்களைக் கொல்ல விரும்புவது ஏன்?
அவர்கள் கிருஷ்ணனின் பக்தர்களல்லவா?
அவர்களா கிருஷ்ணனின் பக்தர்கள்? ஹூம்!


அந்த நாரதன் எப்பொழுதும் 'நாராயண நாராயண' என்று அழைத்துக் கொண்டே இருக்கிறான்.
அவன் என் கிருஷ்ணனுக்கு ஒரு நொடியும் அமைதி அளிப்பதில்லை.
அந்தப் பாவி பிரகலாதனால் கிருஷ்ணன் விஷத்தை அருந்தவும், மலையிலிருந்து குதிக்கவும், நெருப்பினூடே செல்லவும் வேண்டியிருந்தது.
ஆனால், பாஞ்சாலி என்ன செய்தாள்?
துச்சாதனன் அவளைத் துகிலுரித்தபோது, அவள் கிருஷ்ணனை அழைத்தாள்.
அவளுக்காக அவர் விரைந்து ஓடிவர வேண்டியிருந்தது.
அதற்காக அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்?


சரி, அர்ஜுனன் என்ன செய்தான்?
அவனா?
ஏன், அவன்தான் எல்லோரிலும் கொடியவன். அவன் இறைவனை ஒரு அற்ப தேரோட்டி ஆக்கினான்.
ஆ!
என்னால் இவற்றைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.
உங்கள் பதில்கள் அற்புதமானவை ஐயா!
கிருஷ்ணனும் அர்ஜுனனும் அவர்கள் வழியே சென்றனர்.
ஏன் அமைதியாக உள்ளாய், அர்ஜுனா?
என்னை விடவும் உனக்கு சிறந்த பக்தர்கள் உள்ளனர் என்பதைத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன், கிருஷ்ணா!

புத்தகங்கள்?




வேற்றுக் கிரக விரோதிகள்

ஆசிரியர்: ரமேஷ் வைத்யா, வெளியீடு: விகடன் பிரசுரம், சென்னை - 2, விலை.ரூ.65/-

புத்தகம் பார்ப்பதற்கு கலர்ஃபுல்லாக இருந்தாலும் கதை கொஞ்சம் சுமார்தான்! வேற்றுக் கிரகவாசிகளிடமிருந்து நம் பூமியையும் மற்ற கிரகங்களையும் காப்பாற்றுகிறார் இந்திய ராணுவ வீரர் அஜய்.

- நா.வருண்
(மாணவப் பத்திரிகையாளர்)




வாழை மர இளவரசி

ஆசிரியர்: சுதா மூர்த்தி, வெளியீடு: வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17, விலை: ரூ.50/-

ஆங்கிலத்தில் சுதா மூர்த்தி எழுதிய இந்தச் சிறுகதைகளைத் தமிழில் சுப்ர.பாலன் அழகா மொழிபெயர்த்திருக்கார். ஓவியர் லலிதாவின் படங்கள் மேலும் மெருகூட்டுகின்றன. வெறும் கதைகளாக மட்டும் இல்லாம நமது சிந்தனையைத் தூண்டும் விதத்திலும், அடுத்து என்ன என்று சுவாரஸ்யம் ஏற்படுமாறும் ஆசிரியர் கதைகளை வழங்கியுள்ளார். 'கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?', 'சோயா மொச்சையின் கதை' போன்ற கதைகளில் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் அறிவியல்பூர்வமாக இல்லாவிட்டாலும் படிக்க நன்றாக உள்ளன.

- யாழினி அன்புமணி,
(மாணவப் பத்திரிகையாளர்)




சிறுவர்களுக்குப் பேய்க் கதைகள்

ஆசிரியர்: பேராசிரியர் எ.சோதி, வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்த நகர், புதுச்சேரி. விலை: ரூ.40.00/-

சிறுவர்களுக்குப் பேய்க் கதைகள் என்ற கதைகள் மிகவும் நன்றாக உள்ளன. மனிதர்கள் பேயைக் கண்டு பயப்படுவதை மாற்றி, பேய் மனிதர்களைக் கண்டு பயப்படுவதாக நகைச்சுவையுடன் கூறப்பட்டிருக்கிறது. இக்கதையைப் படித்தால் நேரம் போவதே தெரியாது.

- அ.அனீஸ் ஃபாத்திமா
(மாணவப் பத்திரிகையாளர்)



இந்திய நாடு நம் வீடு -5



கோட்டைகள்

வட இந்தியாவின் முக்கியமான மாநிலங்களில் ஒன்றாகக் கருதப்படுவது ராஜஸ்தான். இந்தப் பகுதியை ஆண்ட மன்னர்கள் ராஜபுத்திர இனத்தவர்கள். இவர்களில் சூரிய வம்சத்தில் வந்தவர்கள், சந்திர வம்சத்தில் வந்தவர்கள், ராஜஸ்தானில் உள்ள அபு மலையில் உருவான அக்னியிலிருந்து வந்தவர்கள் என்று மூன்று பிரிவுகளும், 36 உட்பிரிவுகளும், 21 சமஸ்தானங்களும் உள்ளதாக வரலாறு கூறுகிறது. 2001 கணக்கெடுப்பின்படி ஐந்து கோடியே 65 லட்சம் மக்கள்தொகை கொண்ட ராஜஸ்தான் மாநிலம், இந்தியாவின் மிகப் பெரிய மாநிலங்களில் ஒன்றாகும். மொத்த பரப்பளவு மூன்று லட்சத்து 42 ஆயிரம் ச.கி.மீ. இது ஜெர்மனி நாட்டின் பரப்பளவுக்குச் சமம்!

ஐந்தாம் நூற்றாண்டு வரை வலுவாக இருந்த குப்தர்களின் ஆட்சி முடிவுக்கு வந்ததும், ராஜபுத்திர வம்சத்தினர் தலை எடுத்தார்கள். இன்றைய ராஜஸ்தான் மாநிலம் மற்றும் அதனை ஒட்டி அமைந்த பகுதிகளில் பல்வேறு ராஜபுத்திர மன்னர்களும் ஆட்சி செய்தார்கள். தவிர குஜராத், மத்தியப் பிரதேச பகுதிகளிலிருந்து வந்தவர்களும் ராஜஸ்தானின் சில பகுதிகளில் ஆட்சி செய்தார்கள். ராஜபுத்திர மன்னர்கள் வீரம் செறிந்தவர்கள் என்பதால் அவர்களுக்குள்ளே நடந்த போர்கள் பல. அது தவிர துருக்கியப் படைகளுடனும், டெல்லியை ஆண்ட சுல்தான்களுடனும், மொகலாயப் பேரரசர்களுடனும் நடத்திய போர்களின் எண்ணிக்




கௌதம்ராம்

றைந்த ராஜஸ்தான்!

காலப்போக்கில், ஆட்சி இழந்த ராஜ புத்திர மன்னர்களில் பலரும் அரசியல் கட்சிகளில் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்ற உறுப்பினர்களாகி உள்ளார்கள்.

கைக்குக் கணக்கில்லை. போர்களில் வீர மரணம் அடைந்து, தங்கள் தேச மக்களது மனத்தில் அழியா இடம் பிடித்தவர்களும் உண்டு! பிரிதிவி ராஜ் சௌகான், ராணா கும்பா, மகா ராணா பிரதாப், ராணி பத்மினி, ராணா சங்கா, ராஜா மான் சிங் என்று வரலாற்றில் புகழ்பெற்ற பலரது சரித்திரங்கள் இதற்கு உதாரணம்.

ராஜபுத்திரர்களுடன் நேரடியாகப் போரில் ஈடுபடாமல், ராஜபுத்திர அரச குடும்பத்துப் பெண்களை மணந்து நட்புறவுக் கரம் நீட்டியவர்களும் உண்டு. அதற்கு ஒரு உதாரணமாக மொகலாய சக்ரவர்த்தி அக்பர், ராஜபுத்திர இளவரசியான ஜோதா பாயை மணந்துகொண்டார்.

ஆங்கிலேயர் ஆட்சி முடிந்து, இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, ராஜஸ்தான் பகுதியில் இருந்த 23 ராஜ புத்திர மன்னர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளை இணைத்து, ராஜஸ்தான் மாநிலம் உருவாக்கப்பட்டது.

ராஜஸ்தான் மாநில முழுவதிலுமாக பிரம்மாண்டமான கோட்டைகளும், அரண்மனைகளும் இருக்கின்றன. ஜெய்ப்பூர், ஜோத்பூர், உதய்பூர், ஆமெர், ஆல்வார், தோல்பூர், பரத்பூர், ஜெய்சால்மீர், பிகானீ போன்ற நகரங்களிலுள்ள அரண்மனைகள் மற்றும் கோட்டைகள் குறிப்பிடத்தக்கவை. இவை உலகம் எங்குமிருந்து சுற்றுலாப் பயணிகளை பெரிய அளவில் கவர்ந்திழுக்கின்றன. ராஜபுத்திர மன்னர்கள் வாழ்ந்த பல பெரிய அரண்மனைகள் இன்று நட்சத்திர ஓட்டல்களாக மாற்றப்பட்டுள்ளன. தவிர, ரந்தாம்பூர் தேசியப் பூங்கா, சரிஸ்கா புலிகள் சரணாலயம், பரத்பூர் போன்றவையும் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாகும்.

ராஜஸ்தான் மாநில சுற்றுலாவின் மிக முக்கியமான ஓர் அம்சம், அங்கே ஓடும் 'பேலஸ் ஆன் வீல்ஸ்' என்று அழைக்கப்படும் சுற்றுலா சொகுசு ரயி

லாகும். கலை நயத்துடன், நட்சத்திர ஓட்டலில் தங்குவது போன்ற வசதிகள் கொண்ட இந்த ரயில், டெல்லியிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டு ராஜஸ்தான் மாநிலத்தின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று, இறுதியாக ஆக்ரா வழியாக மீண்டும் டெல்லி வந்து சேருகிறது. இந்த எட்டு நாள் சொகுசு ரயில் பயணம் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்திழுக்கிறது.

ராஜஸ்தான் மாநிலத்தின் பாரம்பரிய ஓவியம் - 'ராஜபுத்திர ஓவியக் கலை' என்று அழைக்கப்படுகிறது. ராஜபுத்திர மன்னர்கள், அரசிகள், அரச குடும்பத்



ராஜஸ்தானிய மக்கள் அணியும் உடைகள் வண்ணமயமானவை. எழில் மிகுந்த நீண்ட வண்ணத் துணிகளில் ஆண்கள் அணியும் தலைப்பாகை மிகவும் பிரபலமானது...



தினர், கோட்டைகள், அரண்மனைகள், போர்க்களக் காட்சிகள், மற்றும் தெய்வீகக் காட்சிகள் ராஜபுத்திர பாணி ஓவியங்களாகத் தீட்டப்படுகின்றன. ராஜஸ்தான் கைவினைப் பொருட்களுக்கும் புகழ்பெற்றது. துணிகளில் கைவேலை செய்வதும் ராஜஸ்தானில் பாரம்பரியமாக வரும் ஒன்றாகும்.

ராஜஸ்தானிய மக்கள் அணியும் உடைகள் வண்ணமயமானவை. எழில் மிகுந்த நீண்ட வண்ணத் துணிகளில் ராஜஸ்தானிய ஆண்கள் அணியும் தலைப்பாகை மிகவும் பிரபலமானது. பெண்கள் எம்பிராய்டரி செய்யப்பட்ட ஆடைகளை விரும்பி அணிவார்கள்.

ராஜஸ்தானில் பல்வேறு மதத்தினரும் கொண்டாடும் பண்டிகைகள், திருவிழாக்கள் சிறப்பானவை. ஜெய்சால்மீரில் ஆண்டுதோறும் ஜனவரி/பிப்ரவரியில் பாலைவனத் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஜெய்ப்பூரில் மார்ச் மாதம் பார்வதி தேவிக்காக வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் திருவிழா 'கங்குவார்'. இசை, நடனம், வாணவேடிக்கையுடன் உதய்பூரில் கொண்டாடப்படுவது 'மேவார் திருவிழா'. ஜெய்ப்பூரில் 'யானை திருவிழா' வின்போது நடக்கும் யானை வியா





பாரம் மற்றும் யானைகளை வைத்து நடத்தப்படும் விளை யாட்டுகள், போட்டிகள் வெகு பிரபலம். பீகானீரில் நடக்கும் ஒட்டகச் சந்தை, புஷ்கரில் நடக்கும் சந்தை இரண்டும் இதர முக்கிய சந்தைகளாகும்.

பாலைவனத்தில் கிடைக்கும் காய் கறிகள், குறைவான தண்ணீர், சத்துமிக்க பருப்பு வகைகள் இவற்றைப் பயன் படுத்தி உணவு வகைகளைத் தயாரிப் பது ராஜஸ்தானின் ஸ்பெஷல் ஆகும்.

33 மாவட்டங்கள் கொண்ட ராஜஸ் தானின் முக்கிய விளைபொருட் கள் கோதுமை, புகையிலை, பார்லி, பருத்தி ஆகியவை. மேலும், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக் கள் விளைச்சலிலும், கம்பளி உற்பத்தி யிலும் முன்னணி மாநிலமாகத் திகழ் கிறது. மாநிலம் முழுவதும் நிறைய ஜவுளி, ரசாயனத் தொழிற்சாலைகள் உள்ளன.

ராஜஸ்தானிய மக்களின் தாய்மொழி ராஜஸ்தானி. தவிர, இந்தி, சிந்தி, குஜராத்தி, பஞ்சாபி, ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் மக்கள் பேசுகிறார்கள்.

• • •

படிச்சீங்களா?

ஆசிரியர்: பேராசிரியர் எ.சோதி, வெளியீடு: நன் மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்தநகர், புதுச்சேரி, விலை: ரூ.40/-



வேதாளம் சொன்ன ...க்கதைகள் யாவும் மீண் டும் மீண்டும் படிக்கத் தூண்டுகின் றன. கதையின் வேகத்துக்கு ஓவி யங்கள் மெருகூட்டுகின்றன. சிறு வர்கள் படித்து, அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள உதவுகின் றன. டி.வி பார்க்க, உட்கார்ந்து விடுகிறார்கள் என்று வருந்தும் பெற்றோர்கள் இந்த நூலை வாங்கித் தரலாம்.

- கு. நித்யானந்தன் (மாணவப் பத்திரிகையாளர்)

வாண்டுதாசன்

முன்கதை : வீரபத்ரனின் குருகுலத்தில் படிக்கும் தங்க முகிலனும் கேசவனும் இரவு அருவிக் கரைக் குச் செல்கிறார்கள். அங்கே சூரபத்ரன் வெளவால் உருவத்தில் துரத்துகிறான். வீரபத்ரன் இருவரையும் காப்பாற்றுகிறார். பிறகு தமது இளமை கால நினைவு களில் மூழ்குகிறார். அவரும் சூரபத்ரனும் தேவநாதனிடம் கல்வி கற்கிறார்கள். மந்திரக் கலையின் உச்சத்தை நாளை கற்றுத் தந்து, ஒரு மந்திரவாளை பரிசாக அளிப்பதாகக் கூறுகிறார் தேவநாதன். இனி...

சூரபத்ரனுக்கு உறக்கமே வர வில்லை. எழுந்து அப்படியும் இப்படியு மாக நடந்தான். மாறாக, வீரபத்ரன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

'குருநாதர் அளிக்கும் மந்திர வாளை நானே பெற வேண்டும். அது நடக் குமா? வீரபத்ரன் என்னைவிட கெட்டிக் காரன். இருவரையும் ஒன்றாகவே பார்ப்பதாக குருநாதர் சொன்னாலும் அவன் மீது கூடுதல் பாசமுண்டு. எனது சில நடவடிக்கைகளை அவ்வப்போது கண்டித்துள்ளார். இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால், என்னைவிட இவ னுக்கே வாய்ப்பு அதிகம். மந்திர வாளை வீரபத்ரன் பெறக்கூடாது. என்ன செய்யலாம்?' என்று யோசித்தான்.

நீண்ட நேரம் கழித்து ஒரு திட்டம் உருவானது. அதன்பிறகுதான் சூரபத் ரனுக்கு உறக்கம் வந்தது. எனினும், சீக் கிரமே கண் விழித்துவிட்டான். வீர பத்ரனை நெருங்கினான்.

''வீரா...வீரா'' என்றழைத்தான்.

வீரபத்ரன் கண் திறந்தான். ''என்ன சூரா?''



வீரா – சூரா



''நேரமாகிறது. வா, குளிக்கப் போகலாம்.''

''அட! ஆச்சரியமாக இருக்கிறதே. எப்போதும் தாமதமாக எழுபவன் நீ. தூங்கியபடிதான் குளிக்கவே வருவாய். இன்று என்ன?''

''கடைசி நாளாயிற்றே... உறக்கமே வரவில்லை. உன்னையும் குருநாதரையும் பிரியப்போவதை நினைத்தால் கவலையாக இருக்கிறது'' என்றான் சூரபத்ரன்.

''மனது வைத்தால் இருவரும் ஒன்றாக நாட்டுக்கான நமது கடமையைச் செய்யலாம்'' என்றான் வீரபத்ரன்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். சரி வா,'' என்றான் சூரபத்ரன்.

இருவரும் ஆற்றங்கரையை நோக்கி நடந்தனர். அதிகாலை கானகம் மிக அமைதியாக இருந்தது. ஒரு மான் கூட்டம் இவர்களுக்கு முன்பாக சென்றுகொண்டிருந்தது.

''வீரா! கொஞ்ச நேரம் மந்திர விளையாட்டு விளையாடுவோமா?'' என்று கேட்டான், சூரபத்ரன்.

''மந்திர விளையாட்டா?''

''இதுவரை நாம் கற்ற மந்திர வித்தைகளைப் பயன்படுத்தி விளையாடுவோம். முன்னால் சென்றுகொண்டிருக்கும் மான் கூட்டத்தை சிங்கங்களாக



நான் மாற்றுகிறேன். நீ மீண்டும் மான்களாக மாற்று.''

''சூரா! குருநாதர் சொன்னதை மறந்துவிட்டாயா? தேவையில்லாமலோ, சுயலாபத்துக்கோ மந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது.''

''இது சுயலாபத்துக்கில்லையே... வெறும் விளையாட்டுதானே.''

''வெறும் என்று சொல்லும்போதே அது தேவையற்றதாகிவிடுகிறதே.''



ஐந்து சுறாக்கள் ஒரே நேரத்தில் மேலே வந்தன. சூரபத்ரனையே பார்த்தன. அவன் புன்னகையுடன் தண்ணீரில் குதித்தான். ஒரு சுறாவை நெருங்கித் தடவினான்.

''வீரா... இப்படியெல்லாம் நுணுக்கமாகப் பார்த்துகொண்டிருந்தால் வாழ்வில் எந்த சுவாரஸ்யமும் இருக்காது. நாளை முதல் நாம் சந்திப்போமோ இல்லையோ, இந்த நாளை மறக்க முடியாதவாறு செய்வோமே'' என்றான் சூரபத்ரன்.

வீரபத்ரன் அரை மனத்துடனே சம்மதித்தான். சூரபத்ரன் மான் கூட்டத்தை சிங்கங்களாக மாற்ற, அதை வீரபத்ரன் பழையபடி மாற்றினான்.

''வீரா! இப்போது இந்த இடத்தையே மாற்றுகிறேன். நீ ஆறு இருக்கும் இடத்தைக் கண்டுபிடி பார்க்கலாம்'' என்ற சூரபத்ரன் கண்களை மூடி மந்திரத்தை உச்சரித்தான்.

அடுத்தநொடி, அந்த இடம் பனி கொட்டும் மலைப்பிரதேசமாக மாறியது. திரும்பிய திசையெல்லாம் உறைந்த பனிதான்! வீரபத்ரனுக்கும் விளையாட்டில் ஆர்வம் உண்டானது. வேக வேகமாக நடந்து ஓர் இடத்தை அடைந்தான்.

''இதோ இங்கேதான் ஆறு உள்ளது'' என்றான்.

மந்திரத்தைச் சொல்லி மீண்டும் பழையபடி அந்த இடத்தை மாற்றினர். வீரபத்ரன் சொன்னது சரி! அங்கே ஆறு ஓடிக்கொண்டிருந்தது.

''சபாஷ் வீரா! சரியாகச் சொன்னாய். இப்போது நீ ஏதாவது செய், நான் கண்டு பிடிக்கிறன்'' என்றான் சூரபத்ரன்.

''நான் தண்ணீரில் மூழ்கி எழுகிறேன். என்னை கண்டுபிடி'' என்ற வீரபத்ரன், தண்ணீருக்குள் பாய்ந்து மூழ்கினான்.

சில நிமிடங்கள் சலனமே இல்லை. பிறகு தண்ணீரை கிழித்துக்கொண்டு ஐந்து சுறாக்கள் ஒரே நேரத்தில் மேலே வந்தன. சூரபத்ரனையே பார்த்தன. அவன் புன்னகையுடன் தண்ணீரில் குதித்தான். ஒரு சுறாவை நெருங்கி தடவினான்.

அது வீரபத்ரனாக மாறியது. மற்றவை தண்ணீருக்குள் சென்றுவிட்டன. இருவரும் மகிழ்ச்சியுடன் சிரித்தனர்.

''அடுத்தது நான்'' என்ற சூரபத்ரன்

ஏதோ யோசனையில் ஆழ்ந்தான்.

''என்ன சூரா?''

''ஒரு யோசனை! சும்மாவே விளையாடுவதைவிட ஏதாவது பந்தயம் வைத்து விளையாடினால் இன்னும் நன்றாக இருக்கும்.''

''என்ன பந்தயம்?''

''குருநாதர் கொடுக்கும் மந்திரவாள். இப்போது நடக்கும் விளையாட்டில் யார் ஜெயிக்கிறாரோ அவருக்கே மந்திர வாள்!'' என்றான் சூரபத்ரன்.

வீரபத்ரன் தயக்கத்துடன் பார்த்தான்.

''என்ன வீரா யோசிக்கிறாய்?''

''அது வந்து...சரி! சம்மதிக்கிறேன்'' என்றான்.

சூரபத்ரன் மர்மமாய்ப் புன்னகைத்தான். ''வாக்கை மீறக் கூடாது. வீரா! இப்போது இந்த இடத்தை இரவாக மாற்றுகிறேன். என்னை கண்டுபிடி'' என்றான்.

சூரபத்ரன் வௌவாலாக மாறிப் பறந்தான். அந்த இடமும் அமாவாசை இருட்டானது. வீரபத்ரனுக்கு சில நிமிடங்கள் எதுவுமே தெரியவில்லை. கண்கள் இருட்டுக்குப் பழகியதும் மெல்ல நடந்தான். சிறிது தூரம் வந்ததும் காலடியில் ஏதோ தட்டுப்பட்டது.

குனிந்து தடவினான். 'மெத்' 'மெத்' உணர்வுடன் ஏதோ விலங்கின் உடல். அதிர்ந்துபோன வீரபத்ரன், மந்திர சக்தியால் அந்த இடத்தை பழையபடி பகலாக்கினான். மேலும் அதிர்ந்தான்!

சற்று முன்பு அவர்கள் பார்த்த மான்கள் கூட்டம் செத்துக் கிடந்தன. அவற்றின் உடம்பெல்லாம் பனி! அதே சமயம் -

''வீரா'' என்று கோபமான குரல் வந்தது.

திடுக்கிட்டு திரும்பினான். அங்கே குருநாதர் தேவநாதன் நின்றிருந்தார்.

(தொடரும்)

• வின்னர்ஸ் ! •



விடையைச் சொல்; பரிசை வெல் - 10ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தீர்கள். ஆகவே பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாய் குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்கப்படுகிறது.

சரியான விடைகள்:
1) பெனிசிலின் 2) க்ரிப்டான் 3) வல்லபர் 4) கோண்டு
5) வைட்டமின் சி

பரிசு பெறுவோர்:
1) ஸ்ரீ.பிரகதீஷ் பிரசாத் - கிருஷ்ணகிரி,
2) மஞ்சு - நெய்யூர், 3) ஜெய்சிங் - திருவள்ளூர்,
4) ஆர்.சுகன்யா - அனந்தமங்கலம், 5) எஸ். சிவகவிதா - புதுச்சேரி,
6) கி.சிந்து - திருவிழுந்தூர், 7) ஆர்.ப்ரியதர்ஷினி - மயிலாடுதுறை,
8) கிருஷ்ணகாந்த் - ஸ்ரீரங்கம், 9) வெங்கடகிருஷ்ணன் - மதுரை,
10) ஆர். பிரணவராஜ் - கும்பகோணம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்;
கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

ஹலோ ஃப்ரண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? என்னோடு சேர்ந்து இந்த இதழைத் தயாரித்தது யாருங்கறது உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம். இந்த நாலு பேரும் 'கோகுலம்' அலுவலகத்துக்கு வந்த நாள் முதல் என்னவெல்லாம் செய்தாங்கன்னு தெரியுமா? வாங்க, நான் சொல்றேன்!

- கோகு

• சிறப்பு விருந்தினர்கள் ஈ.எஸ்.ஹரிஹரன், சுஜாதாவுடன் மாணவர்கள்...





குதூகலமாய்த்

• தேர்ந்தெடுத்த ஆறு மாணவப் பத்திரிகையாளர்களில் நான்கு பேர்தான் கலந்துக்கிட்டாங்க. அவங்களை அறிமுகப்படுத்தறேன். முதல்ல... **நா.வருண்** - இவர் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் பேரன். நமது சிறுவர் சங்கத்தின் முதல் உறுப்பினர்.

• அடுத்து **அ.அனீஸ் ஃபாத்திமா** - இவர் தந்தை மு.அப்பாஸ் மந்திரி. இவரும் ஒரு பத்திரிகையாளர், எழுத்தாளர், குழந்தைகளுக்காக நிறைய புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்.

• மூன்றாவது **யாழினி அன்புமணி**- ஈரோடைச் சேர்ந்த இவரது பெற்றோரும் பத்திரிகைகளை வாசிப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபாடு உள்ளவங்க. 'கல்கி' உட்பட நிறைய பத்திரிகைகளில் எழுதியிருக்காங்க.

• கடைசியா... **கு.நித்யானந்தன்** - திருச்சியை அடுத்த கொடாப்பு கிராமம் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். ஊர் சின்னதா இருந்தாலும் இவரது பத்திரிகை ஆர்வம் பெருசு.

• மே இரண்டாம் தேதி எல்லோரும்



தயாரித்த கோகுலம்!

சரியான நேரத்துக்கு நம்ம கோகுலம் அலுவலகத்தில் இருந்தாங்க. அவங்களை வரவேற்று ஆசிரியர் பேசினார். பிறகு, சிறப்பு விருந்தினராக வந்திருந்த கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் **ஈ.எஸ்.ஹரிஹரன் (ரேவதி)**, முன்னாள் உதவி ஆசிரியர் **சுஜாதா** இருவரும் வரவேற்றார்கள்.

- ஒரு சிறுவர் பத்திரிகையை எப்படியெல்லாம் தயாரிக்கலாம், படைப்புகளைத் தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் எவை? இதையெல்லாம் விளக்கமாக சிறப்பு விருந்தினர்கள் சொன்னார்கள்.

- மே. மூன்றாம் தேதி முதல் மாணவப் பத்திரிகையாளர்கள் நான்கு பேரும் கதை, கவிதை போன்ற படைப்புகளைத் தேர்ந்தெடுத்து, ஓவியங்களுக்காக, ஓவியர்களுக்கு அனுப்பினாங்க. வாசகர் பூங்கா பகுதியில் இடம் பெற்றுள்ள குட்டிக் கதை மற்றும் சிறுகதையைத் தேர்ந்தெடுத்தது **யாழினி அன்புமணி** தான்! அத்துடன், சிறப்பாக 'எடிட்' செய்து ஆசிரியரின் பாராட்டையும் பெற்றார்.

- இந்த இதழில் இடம்பெற்றுள்ள பல கட்டுரைகளுக்கு வலைதளத்தில் (இன்டர்நெட்) புகைப்படங்களைத் தேடி எடுத்தார் **நா.வருண்**. அதோடு, ஐ.பி.எல்.ட்வென்டி - ட்வென்டி பற்றிய விமர்சனத்தையும் எழுதினார்.

- நான்கு பேருக்கும் தலா ஒரு புத்தகம் கொடுத்து நூல் விமர்சனம் செய்யச் சொன்னோம். அதையும் சிறப்பா



● டி.டி.பி. பிரிவில்...



● ஆர்ட்டிஸ்ட் பிரிவில்....



● அச்சகத்தில்...

செய்தாங்க. அதுவும் இந்த இதழில் இடம்பெற்று இருக்கு.

படைப்புகள், அவற்றுக்கான ஓவியங்கள், புகைப்படங்கள் தயாரானதும் புத்தகத் தயாரிப்பில் சுறுசுறுப்பா ஈடுபட்டாங்க. கோகுலத்தின் லே-அவுட் டிசைனர்களிடம் படைப்புகளைத் தந்து லே-அவுட்டை மேற்பார்வையிட்டனர்.

● பிறகு DTP பிரிவில் அவற்றைக் கொடுத்து, படைப்புகளைப் பொருத்தினார்கள். புத்தகம் அச்சாகும் பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்கள்.

● வி.ஐ.பி.யைச் சந்திக்கும் நாளில் உதவி ஆசிரியர் மற்றும் புகைப்படக் கலைஞருடன் சேர்ந்து **'இறையன்பு'** அவர்களைச் சந்தித்தனர்.

● வி.ஐ.பி. சந்திப்புக்கான கேள்விகளைத் தயாரித்ததும் இவர்களே! எந்த விதப் பதட்டமுமின்றி கேள்விகளைக் கேட்டு, பதில்களைக் குறித்துக் கொண்டனர்.

● 'நீங்கள் பெரியவர்களானதும் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று இறையன்பு கேட்டார். தங்கள் லட்சியத்தைச் சொன்னார்கள். **கு.நித்யானந்தன்** 'தான், ஒரு விவசாயியாக இருக்க விரும்புவதாக'ச் சொன்னார். இறையன்பு பாராட்டினார்.

● இதழ் தயாரிப்பு முடிந்த இறுதி நாளில் நான்கு பேருக்கும் சான்றிதழ், நினைவுப் பரிசு, சன்மானமும் ஆசிரியரால் வழங்கப்பட்டன.

● ''இது ஓர் இனிமையான அனுபவம். அடுத்த ஆண்டும் இந்தத் திட்டத்தைத் தொடருங்கள்'' என்று கூறி நால்வரும் மகிழ்ந்தார்கள். பிரியாவிடை பெற்று கிளம்பினார்கள்!

அட்டையில்: **நா.வருண், கு.நித்யானந்தன், அ.அனீஸ் ஃபாத்திமா, யாழினி அன்புமணி**

படங்கள்: **ஸ்ரீஹரி**


கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்


526


527


528


529


530


531


532


533


534


535


536


537


538


539


540


541


542


543


544


545


546


547


548


549


550

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licence to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Sri Lanka